விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 05 சனிக்கிழமை (22.10.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 307

ராம்கோ

MADRAS CEMENTS LTD

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

RAMCO CEMENT

சீமெந்து

# ஜனாதிபதி வேட்பாளர் எவரையும் தமிழ்க்கூட்டமைப்பு ஆதரிக்காது?

## கட்சி வட்டாரங்கள் தகவல்

(நமது நிருபர்)

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்தக் கட்சியையும் ஆதரிக்கப் போவதில்லையென த்மிழ்த்தேசியக் கூட்டமைப்பு முடிபு செய்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

**தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை எந்தவொரு கட்சியின் வேட்பாளரும் தெளிவுபடுத்தவில்லை. இந்நிலையில் தாம் யாரை ஆதரிக்க முடியுமென யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கேள்வி எழுப் பியுள்ளார்.**

இலங்கையில் உள்ள சிறுபான்மைக்கட்சிகளில் பெரும்பாலானவை தமது ஆதரவை ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தெரிவித்துள்ளன.

இந் நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது முடிவை இன்னும் வெளியிட வில்லை. இதனையடுத்து கூட்டமைப்பின் ஆதரவு யாருக்கு என்பது குறித்து அரசியல் கட்சிகளிடையே பெரும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் ஆதரவை ரணில் விக்கிரமசிங்க இழந்தால் அவரது வெற்றியில் அது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என ஐ.தே.கட்சி கருதுகிறது.

இதனிடையே ஐக்கிய தேசிக்கட்சி சார்பில் தமிழ்தேசியக் கூட்டமைப்பினரை தொடர்பு கொள்ளும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் கூட்டமைப்பின் சார்பில் எதுவித பதிலும் தெரிவிக்கப்படவில்லை. எதிர்வரும் தேர்தலில் தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளை எந்தவொருகட்சியும் பிரதிநிதித்துவப்படுத்தாததால் எந்தொரு வேட்பாளரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்காது என்றும் தகவல்கள் கூறுகின்றன. (சு)

## தேர்தல் பிரசாரத்திற்கு அனுமதி கோரி விடுதலைப்புலிகளுக்கு ஐ.தே.க.கடிதம்!

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கக்கோரி ஐக்கிய தேசியக்கட்சி விடுதலைப் புலிகளுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த குமார புஞ்சிஹேவா தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கு இக்கடிதத்தினை அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற ஐக்கிய தேசியக்கட்சி நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்து சமாதானத்திற்காக பாடுபடுகின்ற ஒரேஒரு கட்சியாகும்.

முன்பு யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தி சமாதான முயற்சிகளை மேற்கொண்டதும் இக்கட்சியே.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி வெற்றி பெறுவதற்கு வன்னிப்பிரதேசத்தில் தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்வதற்கும் மக்களின் ஆதரவை பெறுவதற்கும் தங்களை சந்தித்து கலந்துரையாட ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திதர வேண்டுமென சாந்தகுமார புஞ்சிஹேவா தனது கடிதத்தில் கேட்டுள்ளார். (சு-4)

## வேட்பாளர்களின் பிரதிநிதிகளுடன் தேர்தல் ஆணையாளர் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர்களினதும் அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகளை தேர்தல் ஆணையாளர் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இராஜகிரிய்வில் உள்ள தேர்தல் செயலகத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது. இதில் வேட்பாளர்களின் பிரதிநிதிகள், கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் பொலிஸ் தேர்தல் செயலகத் திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின்போது கட்சிக் காரியாலயங்களுக்கு அண்மையில் உள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியம் நோக்கி 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணி

இலங்கையில் உண்மையான நீதியான சமாதானத்தை ஏற்படுத்த வலியுறுத்தி பெல்ஜியம் நாட்டில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தை நோக்கி எதிர்வரும் திங்கட்கிழமை 'எழுக தமிழ்' என்னும் மாபெரும் எழுச்சிப்பேரணி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

தமிழ்ப் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் , ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஒரு தலைப்பட்சமாக எடுத்துள்ள நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களையும்,யுத்த நிறுத்த மீறல்களையும் சர்வதேச சமூகம் கண்டிக்கவேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தியே இப்பேரணி நடாத்தப்படவுள்ளது. (ற)

## வன்னியில் நேற்று கடும் மழை

(கிளிநொச்சி)

வன்னியில் நேற்று பிற்பகல் கடும் மழை பெய்துள்ளது. இதன் காரணமாக ஏ9 பாதையூடாக மழை வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கின்றது.

இக் கடும் மழை காரணமாக பெரிய மரம் ஒன்று வேருடன் சாய்ந்ததினால் ஏ9 பாதையூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த தொண்டர்கள் மரத்தை அப்புறப்படுத்திய பின்னர் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

இம் மழைவெள்ளம் காரணமாக வன்னியில் உள்ள சிறு வீதி ஊடான போக்குவரத்துக்கள்பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மழைவெள்ளம் காரணமாக தாழ்வுப்பகுதிகளில் உள்ள மக்கள் பெரும் இன்னல்களை சந்தித்துள்ளனர்.

சில இடங்களில் உள்ள குடிசை வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (சு)

## மேலும் 5,800 பேருக்கு மீட்பு நிதி மீளளிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பிற்கு மேலும் 5,800 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மீளளிப்பிற்கு தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை தமிழீழ நிதித்துறை வெளியிட்டுள்ளது. கடந்த மாதம் 12,700 பேருக்கு தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மீளளிப்பிற்கு தெரிவுசெய்யப்பட்டோர் விபரம் நாளைய வலம்புரியில் வெளிவரும். (தி)

## கூட்டமைப்பின் தலைமைச் செயலகம் திருகோணமலையில் நேற்றுத் திறப்பு

(திருகோணமலை)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைச் செயலகம் திருகோணமலையில் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் நாடாவை வெட்டி செயலகத்தினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினை திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைச் செயலகத்தின் பெயர்ப்பலகையை மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தபால் மூலம் வாக்களிக்க மூன்று இலட்சம் பேர் தகுதி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 3 இலட்சத்து 23 ஆயிரத்து 451 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்ற இவர்கள் அடுத்த மாதம் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் தமது வாக்கினை அளிக்கலாம் என தேர்தல் செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தபால் மூலம் (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 077-2349999,

011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.



எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# வாக்குவங்கி வங்குரோத்தான ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் ஊடகவியலாளரை புறக்கணித்திருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அந்தக்கட்சி செய்தியாளர்களுக்காக எதனையும் முன்மொழியவில்லை. ஆனால் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மாத்திரம் ஊடகங்களை பயன்படுத்திக் கொள்கின்றது என்று அவர் கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொலனாவ பிரதேசத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே பிரதமர் இக்கருத்துக்களைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியை போன்றல்லாது நாங்கள் செய்தியாளர்களின் நலன்குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கின்றோம். கல்விமான்கள், தொழில் துறைசார்ந்தோர், பொதுமக்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்து அவர்கள் கருத்துக்களைக் கேட்ட பின்னரே எமது கொள்கைப் பிரகடனத்தினூடாக நடைமுறைச்சாத்தியமான திட்டத்தை முன்மொழிந்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

அம்மாநாட்டில் உரையாற்றிய ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, இன்று ஐக்கிய தேசியக் கட்சியின வாக்குவங்கி வங்குரோத்தாகிவிட்டது என்றார்.

'மஹிந்தவின் சிந்தனைகள்' என்ற விஞ்ஞாபனத்தில் அரச தனியார் துறைகளை வலுவானதாக்கும் யோசனைகள் உள்ளடங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.(து-9)

# புலிகளின் பகுதியில் விமானம் வீழ்ந்ததை உறுதி செய்தார் விமானப்படைத் தளபதி

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஆளில்லா உளவு விமானம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் விழுந்துள்ளமை உறுதி செய்யப்பட்டிருப்பதாக விமானப் படைத்தளபதி ஏயார் மார்ஷல் டொனால் பெரேரா தெரிவித்துள்ளார்.

உளவு விமானம் ஓமந்தையிலிருந்து 20கிலோ மீற்றர் தொலைவில் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் விழுந்துள்ளது. விமானம் வீழ்ந்த பின்னர் தீப்பற்றி அழிந்திருப்பதாக தகவல் கிடைத்திருக்கின்றது. பயிற்சிப் பயணமொன்றை மேற்கொண்டபோதே விமானத்தின் இலத்திரனியல் கட்டமைப்பு செயலிழந்ததையடுத்து கட்டுப்பாட்டு நிலையத்தினூடான விமானத்தின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்த விமானததை மீட்டுவருவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

# ஆணையாளருக்கு நன்றி

(யாழபபாணம)

நல்லூர் செங்குந்த சந்தையில் அமைந்துள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தின் பக்கமாகப் பருத்தித்துறை வீதியில் ஆரம்பித்து ஆடியபாத வீதியுடன் இணையும் வீதி நீண்ட காலமாக செப்பனிடப்படாத நிலையில் பொதுமக்கள் பாவனைக்கு உதவாததாக இருப்பதை நல்லூர் வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றம் யாழ்.மாநகர ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து அவ் வீதியின் திருத்த வேலைக்கான ஆரமபகட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேற்படி மன்றத்தின் தலைவர் எஸ்.இரத்தினசபாபதி தெரிவித்துள்ளார்.

அவ்வீதித் திருத்தத்துக்காக நேற்று முன்தினம் கற்கள் பறிக்கப்பட்டுள்ளதாகவும், கூடிய விரைவில் வேலைகள் ஆரம்பமாகுமென எதிர்பார்ப்பதாகவும். தெரிவித்த மன்றத்தின் தலைவர், தங்களது கோரிக்கைக்குச் செவிசாயத்து துரித கதியில் நடவடிக்கை எடுத்த மாநகர ஆணையாளருக்கு மன்றத்தின் சார்பில் நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார். (து)

# புலமைப்பரிசில் வழங்கும் வைபவம

கல்விச் சேவை ஊழியர்களின் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு பல்கலைக்கழக புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் இன்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, மங்கள சமரவீர, தினேஷ் குணவர்த்தன, அமரசிறி தொடங் கொட மற்றும் பிரதியமைச்சர் ஸ்ரீ பாலத் கம்லத் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-7)

# யுத்த காலப்பகுதியில் காணாமல் போனவர்களின் உறவினர் யாழ்.செயலகத்தில் மறியல் போராட்டம்

யுத்த காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் காணாமல் போனவர்களது பெற்றோர்கள் உறவினர்கள நேற்று யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்னாள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இப்போராட்டத்தில் நூற்றிற்கும் மேற்பட்டோர் பதாதைகளை தாங்கிய வண்ணம் ஈடுபட்டார்கள்.

நேற்று காலை யாழ்.மாவட்ட செயலகத்தின் பிரதான வாசலின் முன்பாக ஒன்றுகூடிய இவர்கள் யாழ மாவட்ட அரச அதிபர் கே.கணேசை உட்செல்லவிடாது காணாமல் போன எமது உறவுகளின் நிலை தொடர்பாக உறுதியான முடிவைப் பெற்றுத் தரும்படி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இவர்களின் பிரச்சினைக்கான உரிய தீர்வை காலக்கிரமத்தில் பெற்றுத் தருவதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கூறியதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. இறுதியில் யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (அ-19)

## ஊரிக்காடு மயானம் புனரமைப்பு

(வல்வெட்டித்துறை)

ஊரிக்காடு இந்துமயானம் உலக உணவுத்திட்டத்தினரின் நிதியுதவியுடன் வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற சுகாதாரத் தொழிலாளர்களால் துரித கதியில் புனரமைக்கப்பட்டு பனம் விதைகள் நாட்டப்பட்டு வருகிறது.

இந்த மயான திருத்தப்பணிக்கான பொருள், மற்றும் வாகன உதவிகளை வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் வழங்கிவருகிறது. இந்த மயானம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமை குறித்து விரிவான செய்தி ஒன்றினை வலம்புரி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-32)

# வெளிநாட்டு கடன் அட்டை மோசடி இருவருக்கு விளக்கமறியல்

இங்கிலாந்து தனியார் வங்கிகள் சிலவற்றின் கடன் அட்டைகளை மோசடி செய்து 10இலட்சம் ரூபாவிற்கும் மேல் பெறுமதி வாய்ந்த பொருட்களைக் கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட இரு சந்தேக நபர்கள் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, உப்புவெளி பிரதேசங்களைச் சேர்ந்த லக்ஸ்மன் சஞ்சீவ மற்றும் சிவசுப்பிரமணியம் பிரகார் ஆகிய இருவரை கொழும்பு கோட்டை நீதவான் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

தனியார் வங்கியொன்றினால் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொண்ட கோட்டை குற்றப் புலனாய்வுப் பிரிவு இவ்விருவரையும் கைதுசெய்தது.

இது தொடர்பிலான விசாரணைகள் இதுவரை முடிவடையவில்லையென்றும், சந்தேக நபர்களை விடுதலை செய்தால் விசாரணைகளுக்கு தடை ஏற்படலாமென்றும் காவல்துறையினர் தெரிவித்த கருத்துக்களை ஆராய்ந்த நீதவான் சந்தேக நபர்களின் பிணை மனுவை இரத்துச்செய்து அவர்களை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். (து)

# இராசி பலன்

22.10.2005
(ஐப்பசி 5, சனிக்கிழமை)
பஞ்சமி பிற்பகல் 4.51 வரை
மிருகசீரிடம் முன்னிரவு 8.14 வரை
இராகுகாலம் - 9.02 - 10.32 வரை
சுபநேரம் - 3.02 - 4.32வரை

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவரவு, நண்பர்கள் உதவி, பிரயாண நன்மை. |
| இடபம் | அதிகசெலவு, போசன சுகக்குறைவு, மனோ சங்கடம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | வெகுமானம், நல்ல வரவேற்பு, மாதர் நட்பு, கற்பனை மிகுதி. |
| கடகம் | பிறருக்கு உதவுதல், முயற்சி தாமதம், சுப செலவு, சோம்பல் நிலை. |
| சிங்கம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, மனமகிழ்ச்சி, போசனசுகம். |
| கன்னி | நன்கொடை, இஷ்டசித்தி, மனமகிழ்ச்சி, பெரியோர் சந்திப்பு. |
| துலாம் | கட்டுப்பாடு, சரீரப்பிரயாசை, அதிக செலவு, புத்திரரால் கவலை. |
| விருச்சிகம் | மனக்கவலை, பொருள்விரயம், அபகீர்த்தி, வாகன்பயம். |
| தனுசு | தேகநலன், மனோதைரியம், கீர்த்தி, காரிய நன்மை. |
| மகரம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், நண்பர்கள் சந்திப்பு, போசன நன்மை. |
| கும்பம் | அஜீரண ரோகம், மனக்கவலை, காரிய தாமதம், பணத்தட்டுப்பாடு. |
| மீனம் | சுபசெலவு, முயற்சி தாமதம், புதிய விடயம், நண்பர்கள் சந்திப்பு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# மீண்டும் சட்டவிரோத மின்பாவனை

(பொன்னாலை)

வலி-மேற்குப் பிரதேசத்தில் மீண்டும் சட்ட விரோத மின்பாவனைகள் அதிகரித்து வருவதாக அப்பகுதிப் பொது அமைப்புகள் கவலை தெரிவிக்கின்றன.

சிறிதுகாலம் வெகுவாகக் குறைந்திருந்த இந்தச் சட்டவிரோத மின்பாவனை மீண்டும் தலைதூக்கி வருவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பற்ற ஓலைக் குடிசைகளிலுள்ளவர்கள் எல்லாம் சட்டவிரோதமான மின்பாவனைகளை மேற்கொண்டு வருகின்றனர். பருவ மழை தொடங்கியிருப்பதால் இம் மின்சாரப்பாவனை பல மடங்கு அபாயத்தை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட தரப்பினர் பாவனையாளர்களை இனங்கண்டு இச்சட்டவிரோத மின்பாவனைகளை உடன்நிறுத்த நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று பொது அமைப்புக்கள் பலவும் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன. (து-49)

# குமுக்கன் குளம் புனரமைப்பு

(பொன்னாலை)

வலி-மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள அராலி மத்தி கிராம அலுவல் பிரிவுக்குட்பட்ட குமுக்கன் குளம் புனரமைக்கப்பட்டுள்ளது.

வலி-மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸின் பெருமுயற்சியால், யாழ்.மாவட்ட கமநலசேவைகள் உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் இக்குளப் புனரமைப்புக்கென சுமார் 4 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மிகவும் பாதுகாப்பற்றதொரு குளமாக இருந்து வந்த இக்குளத்துக்குத் தற்போது அணைக்கட்டு கட்டப்பட்டுப் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (து-49)

# நியாப் திட்டத்தின் மூலம் வீதி புனர்நிர்மாணம்

(பொன்னாலை)

அராலி மத்தி-வண்ணபுரம் விவசாய வீதி நியாப் திட்டம் II மூலம் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

வலி-மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் இதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார். வலி-மேற்குப் பிரதேச சபையினரின் ஏற்பாட்டில் இவ் வீதி புனரமைப்புச் செய்வதற்கான மூலப் பொருட்கள் பறிக்கும் வேலைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

சுமார் 40 வருடங்களுக்கு மேலாகப் புனரமைச் செய்யப்படாது இருந்துவந்த இந்த வீதி தற்போது புனரமைப்புச் செய்யப்படவுள்ளதென்று பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (து-49)







நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தின் வாணி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும், விருந்தினர்களுடன் நிலைய அங்கத்தவர்களை அடுத்த படத்திலும், இந்நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# இரண்டு இலட்சம் ரூபா பணம் பட்டப்பகலில் பஸ்ஸில் அபேஸ்

திருமணத் தேவைக்கென வங்கியில் வைப்பிலிடுவதற்கென கொண்டு சென்ற 2இலட்சம் ரூபா பணம் மினிபஸ்ஸினுள் திருட்டுப் போயுள்ளது.

இச்சம்பவம் நேற்றுக்காலை பருத்தித் துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொணடிருந்த மினிபஸ்ஸினுள் இடம்பெற்றுள் ளது. இருபாலையைச் சேர்ந்த இராசதுரை கார்த்திகா என்பவரே இப் பணத்தை பறி கொடுத்தவராவார். இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கியொன்றில வைப்பிலிடுவதற்காக 2இலட்சம் ரூபா பணத்தை கைப்பையினுள் வைத்து தாயுடன் இருபாலைச சந்தியிலிருந்து மினிபஸ்ஸில் ஏறிச்சென்ற யுவதி, வழியில் நல்லூர் முன்வீதியில் தனது கைப்பை பாரம் குறைந்திருப்பதை அவதானித் ததும் கைப்பையை திறந்து பார்த்த போது 2 இலட்சம் ரூபாவும் திருட்டுப் போனமை அவதானிக்கப்பட்டது.

உடனடியாக மினிபஸ் நடத்துநருக்கு இதனைத் தெரியப்படுத்தியதையடுத்து பயணிகள அனைவருடனும் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு மினிபஸ் கொண்டு செல்லப் பட்டு அங்கு தீவிர சோதனை மேற்கொள்ளப் பட்டது.எனினும்,இப் பணம் ஒருவரிடமும் அகப்படவில்லை. இருப்பினும், நல்லூர் முன் வீதியில் இடையில் இறங்கி ஏறிய வவுனி யாவைச் சேர்ந்த இரு பெண்களை சந்தேகத் தின் பேரில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.


இதேவேளை, மேற்படி மினிபஸ்ஸில் பயணம் செய்த அனைவரும் தமக்கு ஏற்பட்ட நேர விரயத்தையிட்டு விசனமடைந்ததுடன் பணத தைக் கொண்டுசெல்வோர் கவனத்துடன் இருக்க வேண்டுமெனவும் ஆலோசனை கூறினர். (ற-101)



நன்றி: தமிழ் நெற்

# நோர்வே ஒஸ்லோவில் நடைபெற்ற பொங்குதமிழ் தீப்பந்த எழுச்சிப்பேரணி



'எழுவோம் தமிழின உரிமைக்காக' எனும பொங்குதமிழ் தீப்பந்த எழுச்சிப்பேரணி நோர் வே தலைநகர் ஒஸ்லோவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சுமார் ஆயிரத்து 500ற்கும் மேற்பட்ட நோர்வே வாழ் தமிழ் மக்கள் இந்த எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டு, தமிழ்த் தேசிய ஒருமைப் பாட்டின் பலத்தினையும் உணர்வெழுச்சி யினை யும் வெளிப்படுத்தினர்.

தமிழீழத் தாயக மக்களின் நீதியானதும் உண்மையானதுமான விடுதலைக்காக தமது ஒருமித்த குரலை புதிய நோர்வே அர சாங்கத் திற்கும் அனைத்துலக சமூகத்திற்கும் இவர்கள் வலியுறுத்தினர்.

அடைமழையுடன் சீரற்ற கால நிலை நிலவிய போதும், சிறுவர்கள், இளையவர்கள், பெரியவர் கள்,முதியவர்கள் என நோர்வேயின் பல வேறு நகரங்களிலுமிருந்தும் வந்து பெருந் திரளான மக்கள் பொங்குதமிழ் தீப்பந்த எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்டனர்.

நோர்வே அரசியல் கட்சிகளின் பிரதிநிதி கள், தமிழ் சர்வமத குருமார் மற்றும் பேராளர் களின உரைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து பொங்குதமிழ் எழுச்சிப்பாடல்களும் இசைக் கப்பட்டன.

தொடர்ந்து சமாதானத்திற்கான தீப்பந் தங் களை ஏந்தியவாறு புறப்பட்ட பேரணி நோர்வே நாடாளுமன்றத்தைச் சென்றடைந் தது.



இலங்கைத்தீவில் உண்மையானதும் நீதியா னதுமான சமாதானம் உருவாக்கப்பட வேண்டும். தமிழீழ மக்களின் தன்னாட்சி இறைமை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் போன்ற கோரிக் கைகள் உள்ளடங்கிய மகஜர் நாடாளுமன் றத்தில் கையளிக்கப்பட்டது.

நோர்வேயின் புதிய கூட்டணி அரசாங்கத் தின் தலைமைக்கட்சியான தொழிலாளர் கட்சியின் ஒஸ்லோ பிரதேசத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன் போலர் மற்றும் வெளியுறவு அரசியல் செயற் குழுவின் பேச்சாளர் ஓகத் வல்லா ஆகியோர் மகஜரைப் பெற்றுக் கொண்டனர். (ற)

# கறுப்புப் பூனைப் படையிடம் பயிற்சி பெற்ற படையினர் ரணில்,மஹிந்தவின் பாதுகாப்புக்கு!

(கொழும்பு)

தேர்தலின் போது அரசியல் உள் நோக் கங்களுடன் இரு முதன்மை வேட்பாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படக் கூடும் என்ற ஐயம் காணப்படுவதால் இருவருக்குமான பாதுகாப்புக்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இரு வேட்பாளர்களும் பங்கேற்கும் அனைத துக கூட்டங்களுக்கும் கடுமையான பாது காப்பு வழங்கவென தனியான குழுவும் உரு வாக்கப்பட்டுள்ளது.ஜனாதிபதி சந்திரி காவின் பணிப்பிற்கமையவே இது மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த இரு வேட்பாளர்களின் பாதுகாப் பிற்கென தனியே பிரதிப் பொலிஸ்மா அதி பர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.இந்தப் பிர முகர்களுக்கான பாதுகாப்பை வழங்கு வதற்கு கறுப்புப் பூனைப் படையிடம் பயிற்சி பெற்றவர்கள் இக் குழுவில் இடம்பெறுகின் றனர் எனக் கூறிய பொலிஸ்மா அதிபர் பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கை கள் முழுமையாக கண்காணிக்கப்படுகின் றன என்றும் தெரிவித்தார். (ற)

## 98 வன்முறைகள்-147 பேர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக நேற்று வரை 98முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. தேர்தலுக்கான பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி நவரட்ண இது குறித்து கூறியதாவது,

தங்காலை, மாத்தறை,காலி,வெலிகம, களுத்துறை, கொழும்பு,கண்டிஉள்ளிட்ட பகுதிகளில் தேர்தல் வன்முறை முறைப்பாடு கள் பதிவாகியுள்ளன.

இதில் தொடர்புடைய 147பேர் கைது செய் யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டனர்.இவர்களில் சிலர் விடுதலை செய் யப்பட்டனர்.மேலும் சிலர் பிணையில் விடு விக்கப் பட்டனர்.

அண்மையில் கலவானையில் ஜே.வி.பி யினர் மீது ஐக்கிய தேசியக் கட்சியினர் நடத்திய தாக்குதலே பாரிய வன்முறை யாகும் இது தொடர்பில் எவரும் இதுவரை கைதுசெய்யப் படவில்லை என்றார் காமினி நவரட்ண. (ற)

# இன்று திருகோணமலையில் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு

## நேற்று படைத்தரப்பு-கூட்டமைப்பு சந்திப்பு

(திருகோணமலை)

திருமலையில் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்ச்சிக்குரிய ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும்,அதற்கான ஏற்பாடுக ளில் ஏற்பாட்டுக் குழுவினருடன் திருமலை தமிழ் மக்கள் பாரிய அளவில் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் தெரியவருகிறது.

இதன் ஒரு கட்டமாக நேற்று தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கும், படைத்தரப்பிற்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

படைத்தரப்பில் 22வது படைத் தளபதி பிரிகேடியர், சுமித்பால சூரிய,கிழக்குப் பிராந் திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஹான், ஏ.ரட்ண ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் களான இரா.சம்பந்தன்,துரைரட்ணம் ஆகி யோரும் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பு கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இன்று இடம்பெறவுள்ள எழுச்சி நிகழ வுக்கு தாம் பூரண ஒத்துழைப்பை வழங்கு வதாகவும் அதேசமயம்தேவையான பாதுகாப்பை வழங்குவதாகவும் படைத்தரப் பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,நேற்றுக் காலை 5மணி தொடக்கம் 7மணியிலான காலப் பகுதிக்குள் அலஸ்தோட்ட பிரதேசத்தில் உள்ள ஆனந்த புரி, நித்தியபுரி ஆகிய கிராமங்களைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று தீவிர சோதனைகளை நடத்தியி ருப்பதோடு,ஆட்பதிவுத் திணைக்கள அடை யாள அட்டைகளையும், குடும்ப விபரங் களையும் சேகரித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ற)

வாசிப்பு மாதம்
காசோலை என்றால் அகவிழி என்ற பெயருக்கும் காசுக்கட்டளை
எனில் ஹவலக் ரவுனில் மாற்றக் கூடியதாகவும் அனுப்பவும்.
(வருடச் சந்தா ரூ.300 மட்டுமே)
தொடர்புகட்கு:- அகவிழி, இல-03, டொறிங்ரன் அவனியு, கொழும்பு-07.
தொலைபேசி-011 2506272 E-Mail:ahavili@ viluthu.org
வாசியுங்கள் அகவிழி திறக்கும்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!
C-அ 1755
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவநோக்கு...

# இன்று ஒருதகவல்

## மனம்

மனம் இருக்கிறதே அதற்கு உதாரணமாக குரங்கைத்தான் சொல்வார்கள் தெரியுமா! குரங்கு மரத்தின் ஒரு இடத்திலேயா உட்கார்ந்திருக்கும்? ஒவ்வொரு கிளையாகத் தாவித் தாவிப் போய்க்கொண்டே இருக்கும். ஏதாவது சேஷ்டைசெய்து கொண்டே இருக்கும். அதனால் தான் ‘மனம் ஒரு குரங்கு’ என்று சொல்வார்கள். ‘இந்த மனதைக் கன்னா பின்னாவென்று அலைய விடாதே அதை ஒரு நிலைப்படுத்து’ என்று பெரியவர்கள் சொல்வார்கள். அவர்களுக்கென்ன சுலபமாகச் சொல்லிவிடுவார்கள் அவஸ்தை நமக்கல்லவா புரிகிறது?

நமது மனமெல்லாம் வெறுமனே அலைவதோடு இருந்தால் அது எங்கே அலைந்துகொண்டிருக்கிறதென்று தேடிக் கண்டுபிடித்து அதைக் கட்டுப்படுத்தலாம். சிலசமயம் அது அலையப்போகும் போது அப்படியே காணாமல் போய்விடுகிறதே! எங்கேயிருக்கிறது என்று கண்டுபிடிப்பதே பெரும்பாடாக இருக்கிறது. பிறகெங்கே அதைக் கட்டுப்படுத்துவது, அதுவாக மனம் வைத்தால்தான் உண்டு.

மனதை ஒரு நிலைப்படுத்துவது மிகவும் கஷ்டம் என்று பலபேர் நினைக்கின்றோம். அது எல்லோராலும் முடியாத காரியமாம். ‘வேண்டு மென்றால் ஒரு பரிசோதனை செய்து பாருங்கள் என்கிறார் ஒருபெரியவர். வேறு ஒன்றுமில்லை ஒரு சாதாரண ஆளிடம் நிறையச் சில்லறைக் காசுகளைக் கொடுத்து ‘எவ்வளவு இருக்கிறது’ என்று எண்ணச் சொல்லுங்கள் அவன் எவ்வளவுதான் எண்ணினாலும் நடுவில் எண்ணிக்கையைத் தவறவிட்டு முடிப்பான். மறுபடி முதலிலிருந்து ஆரம்பிப்பான். அதே ஆளிடம் நூறுரூபா தாள்களைக் கொடுத்து எண்ணச்சொல்லுங்கள். இப்போது அந்த ஆள் கொஞ்சம் நிதானமாக கவனமாக எண்ண ஆரம்பிப்பான். இது ஏன்? ஒரு தாளைவிட்டுவிட்டால் நூறுரூபா போய்விடுமே! முதலில் அப்படி இல்லை 50 சதம் போனாலும் 1 ரூபா போனாலும் அது பெரிதாக மனதில் தோன்றாது.

இந்த உலகில் எதுவும் பெரிதில்லை... இதைவிட பெரிதாக உள்ளது ஒன்றிருக்கிறது. அதற்கு விலை மதிப்பில்லை என்ற எண்ணம் வந்துவிட்டால் மனதை ஒருநிலைப்படுத்துவது கஷ்டமாக இருக்காது என்கிறார் அந்தப் பெரியவர். மனதை ஒருநிலைப்படுத்தி விட்டால் வெற்றி அருகில் நெருங்கிவந்துவிட்டது என்று அர்த்தம். துரியோதனன் அருச்சுனன் இருவருக்குமே குரு துரோணர்தான். இவர்கள் இரண்டு பேருக்கும் அவர்தான் வில்வித்தை கற்றுக்கொடுத்தார். கற்றுக்கொடுத்ததைப் பொறுத்தவரை எந்த வித்தியாசமுமில்லை. இரண்டு பேருக்கும் ஒரே மாதிரிதான் சொல்லிக் கொடுத்தார். ஆனால் அருச்சுனன் தான் கெட்டிக்காரனாக வந்தான். ஏன்? அங்கேதான் விஷயமிருக்கிறது.

ஒருநாள் அருச்சுனன், துரியோதனன் இருவருக்கும் துரோணர் ஒரு பரீட்சை வைத்தார். எந்தளவிற்கு இவர்கள் கற்றிருக்கிறார்கள் என்று பார்ப்பதற்காக இரண்டுபேரையும் காட்டுக்கு அழைத்துக்கொண்டு போய் ஒரு இடத்தில் நிறுத்தினார். முதலில் துரியோதனனைக் கூப்பிட்டார். அதோ தெரிகிறது பார் ஒரு மரம். அந்த மரத்தின் வலதுபக்கத்தில் நீளமாக இருக்கும் ஒரு கிளை மீது ஒரு புறா உட்கார்ந்திருக்கிறது. அந்தப் புறாவின் வலது கண்ணுக்கு நீ குறிவைக்கவேண்டும் என்றார். துரியோதனன் அதே மாதிரிச் செய்தான். இப்போது உனக்கு என்ன தெரிகிறது? என்று கேட்டார் துரோணர். அவன் அதற்கு மரம் தெரிகிறது. அந்த மரத்தின் கிளை தெரிகிறது. அதன் மீது அமர்ந்திருக்கிறது புறா. கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் நீங்கள் குறிவைக்கச் சொன்ன அந்த வலது கண்ணும் தெரிகிறது என்றான். சரி நீ போகலாம்’ என்றார் குரு.

அடுத்ததாக அருச்சுனனைக் கூப்பிட்டார். அதே மாதிரி குறிவைக்கச் சொன்னார். அவனும் அதேமாதிரிச் செய்தான். இப்போது உனக்கு என்ன தெரிகிறது? என்று கேட்டார் துரோணர். ‘புறாவின் வலது கண்ணைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியவில்லையே’ என்றான். அருச்சுனனுக்கு நிகராக துரியோதனன் வரவே முடியாது என்று அப்போதே முடிவு செய்துவிட்டாராம் துரோணர். அதனால் மனம் எந்தளவுக்கு ஒரு நிலைப்படுகிறதோ அதுதான் வெற்றிக்கு ரகசியம்.

இந்தக் காலத்து இளைஞன் ஒருவன் ஒரு துப்பாக்கியோடு ஒரு வைத்தியரைத் தேடிவந்தான். சார் எனக்குத் துப்பாக்கி சுடக் கற்றுக்கொடுங்கள் என்றான். உனக்கு இந்தத் துப்பாக்கி எப்படிக் கிடைத்தது? என்று பயந்து போய்க் கேட்டார் வாத்தியார். “எங்கள் அப்பா வைத்திருந்தார். அவருக்கும் தெரியாமல் இங்கே எடுத்துக்கொண்டு வந்து விட்டேன். என் அப்பா திரும்பி வீட்டுக்குள் வருவதற்குள் திருப்பிக் கொண்டுபோய் இது இருந்த இடத்தில் வைத்துவிடுவேன்” என்று மிகவும் நம்பிக்கையோடு சொன்னான்.

‘சரி’ என்று சொல்லிவிட்டு இந்த வாத்தியாரும் துரோணர் மாதிரியே ஒரு மரத்தைக் காட்டி அதில் உட்கார்ந்திருக்கும் ஒரு காகத்தின் கண்ணுக்கு குறிவைக்கச் சொன்னார். இவனும் குறிவைத்தான். இப்போது உனது கண்ணுக்கு என்ன தெரிகிறது என்ற கேட்டார். இவனுக்குக் கைகாலெல்லாம் லேசாக உதற ஆரம்பித்தது. சார்! என் அப்பாவின் முகம்தான் சார் அங்கே தெரிகிறது’ என்றான். அங்கே மட்டு மல்ல... உனக்குப் பின்னாலும் உங்கள் அப்பாவின் முகம்தான் இப்போது தெரிகிறது. திரும்பிப்பார். அவரே உன்னைத் தேடிக்கொண்டு இங்கே வந்துவிட்டார் என்றார் வாத்தியார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ரணில் பரிந்துரைக்கும் எந்தவொரு நேரடி விவாதத்திற்கும் நாம் தயார்

## -பிரதி அமைச்சர் சிறிபதி சூரியராச்சி

(கொழும்பு)

அம்பாந்தோட்டை ஆழிப்பேரலை நிவாரண நிதி மோசடி வழக்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தடையாணை பெற்றது சரியான நடவடிக்கையே என்று பிரதி அமைச்சர் சிறிபதி சூரியராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களிடம் சிறிபதி சூரியராச்சி இது தொடர்பில் கூறியதாவது,

அம்பாந்தோட்டை வழக்கு விசாரணையானது ஊடகம் ஒன்றில் வெளியான செய்திகளை அடிப்படையாகக்கொண்டது மட்டுமே. தேர்தல் காலத்தில் தம் மீதான இந்த அவதூறு பிரசாரத்தைத் தடுக்கவே மஹிந்த ராஜபக்ஷ தடயாணை பெற்றார். இலஞ்சத் தடுப்பு ஆணைக்குழுவின் விசாரணையை மஹிந்த ராஜபக்ஷவும் எந்தச் சுழலிலும் தடுக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் கணனி கொள்வனவு மோசடி வழக்கு குறித்தும் அம்பாந்தோட்டை வழக்கு குறித்தும் ரணில் பரிந்துரைக்கும் எந்தஇலத்திரனியல் ஊடக விவாதத்துக்கும் நாங்கள் தயாராக உள்ளோம்.

அம்பாந்தோட்டை புகாரைப் பொறுத்தவரையில் பிரதமர் அலுவலகமானது வங்கிக்கணக்கு மாற்றம் தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதுவும் தெரியாது என தெளிவாக விளக்கம் அளித்துவிட்டது.

ஆனால் ரணிலின் கணனி கொள்வனவு மோசடி வழக்கில் அவரது செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தான் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளார் என்றார் சூரியராச்சி. (ற)

# யாழ்.வைத்தியசாலைப் படுகொலை

## 18ஆவது ஆண்டு நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தினால் 1987ஆம் ஆண்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் படுகொலைசெய்யப்பட்ட வைத்தியர்கள், தாதிமார்கள், சீற்றூழியர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட 21 பேரினது 18ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட 21 பேரினது நினைவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் இறந்தவர்களின் நினைவாக 21 தீபங்கள் ஏற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இறந்தவர்களது ஆத்மா சாந்தியடைவதற்காக சைவ, கிறிஸ்தவ பிரார்த்தனையை தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரவிராஜ் உட்பட பலர் அஞ்சலி உரை ஆற்றினார்கள். (அ-19)

# விமல் வீரவன்ஸவின் கூட்டத்திற்கு சென்ற தமிழ்ப்பெண் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து ஜே.வி.பியினர் நடத்திய காலி பொதுக்கூட்டத்துக்குச் சென்ற இளம் தமிழ் பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காலியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச பங்கேற்றிருந்தார். அக் கூட்டத்துக்குச் சென்ற தமிழப் பெண் ஒருவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தியதில் அவர் ஒரு விடுதலைப் புலி உறுப்பினர் எனத் தெரிய வந்ததாகவும் இதனையடுத்தே அப்பெண்ணை தாம் கைதுசெய்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தன்னை சிங்களவர் என்று கூறிய அந்தப் பெண், தமிழர் மனித உரிமை மைய ஊழியர் என்று கூறியதாகவும் இறுதியில் திருகோணமலையைச் சேர்ந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் எனத் தெரிவித்ததாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளார். (ற)









**இந்திய இராணுவத்தினரால் 1987ஆம் ஆண்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து படுகொலை செய்யப்பட்ட 21 பேரதும் 18 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்றுக்காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.**

**இந்நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட 21பேரினதும் உருவப்படங்களையும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரவிராஜும் படுகொலை செய்யப்பட்டவர்களது உறவினர் ஒருவரும் பொதுச்சுடரினை ஏற்றி வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.**

(படங்கள்:- ஞா.ஜங்கரன்)

# 'நான் குற்றமற்றவன்'

## நீதிமன்றில் சதாம் கதறல்




(பக்தாத்)

ஈராக்கில் 150 ஷியா முஸ்லிம்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக முன்னாள் அதிபர் சதாம் உசேனிடம் கடந்த புதன்கிழமை விசாரணை நடைபெற்றது. விசாரணையின்போது 'நான் குற்றமற்றவன், நான் அப்பாவி' என்று கதறினார் சதாம் உசேன்.

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் உசேன் ஆட்சிக் காலத்தில் ஹிட்லரைப் போன்று கொடுங்கோலாட்சி புரிந்து வந்தார். தனக்கு எதிராகக் குரல் எழுப்பிய ஈராக்கியர்களை எல்லாம் கொன்று குவித்தார் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

சதாம் உசேனின் காட்டு தர்பாருக்கு முடிவுகட்டத் தயாரான அமெரிக்கா, ஈராக் பேரழிவு ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டி அந்நாட்டின் மீது போர் தொடுத்தது. அதற்கு இங்கிலாந்தும் தோள் கொடுத்தது.

அமெரிக்க-பிரிட்டன் கூட்டுப்படையின் தாக்குதலை சமாளிக்க முடியாத ஈராக் இராணுவம் தோல்வியடைந்தது. சதாம் உசேன் தலைமறைவானார். பின்னர் கூட்டுப்படையின் தீவிர தேடுதலால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பதுங்கு குழிக்குள் வைத்து சதாம் கைதுசெய்யப்பட்டார்.



கைதுசெய்யப்பட்ட சதாம் உசேன் மீது ஏராளமான குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1982ஆம் ஆண்டு துஜைல் என்ற கிராமத்திற்கு சதாம் சென்றிருந்தபோது அவரைக் கொல்ல முயற்சித்ததாகக் கூறி துஜைல் கிராமத்தின் மீது இரசாயன குண்டு வீசி தாக்குதல் நடத்தியது சதாம் ஆதரவுபடை. இதனால் சுமார் 150 ஷியா பிரிவு முஸ்லிம்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சதாம் உசேனிடமும் அவரது சகாக்களிடமும் நேற்று முன்தினம் விசாரணை நடைபெற்றது. இந்த வழக்கிற்காக சதாம் உசேன் இரண்டு முறை விசாரிக்கப்பட்டுவிட்டார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணை இறுதி கட்ட விசாரணையாகும்.

இந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் சதாம் உசேனுக்கு மரண தண்டனை அளிக்கப்படும் என்றும் தெரிய வருகிறது. இந் நிலையில் நேற்று முன் தினம் பக்தாத்தில் உள்ள சதாம் உசேனின் 'பாத்' கட்சி அலுவலகமாக இருந்த கட்டடம் நீதிமன்றமாக மாற்றப்பட்டு அங்குதான் விசாரணை நடைபெற்றது.



நீதி மன்றத்திற்கு வெளியே கூடியுள்ள சதாம் ஆதரவாளர்கள்.

பலத்த பாதுகாப்புக்கு இடையே குண்டு துளைக்காத ஆடை அணிந்து இரண்டு ஈராக் இராணுவ வீரர்கள் சதாம் உசேனை நீதிமன்ற வளாகத்திற்குள் அழைத்துச் சென்றனர். அப்போது சதாம் உசேன் சிமெண்ட் கலர் பாண்டும் வெள்ளைநிற சட்டையும் அணிந்திருந்தார்.

நீதிமன்ற வளாகத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட சதாம் உசேன், அருகில் குண்டு துளைக்காத அறையில் இருந்த பத்திரிகையாளர்களை பார்த்த வண்ணம் மெதுவாக நடந்துசென்றார். நீதிமன்ற அறையின் இரண்டாவது வரிசையில் நடுவில் இவர் பாதுகாப்பாக அமர்த்தப்பட்டார்.

சரியாக 12.15மணிக்கு 5 நீதிபதிகளும் நீதிமன்றத்திற்கு வந்தனர். அவர்கள் அனைவரும் குண்டு துளைக்காத உடை அணிந்து வந்திருந்தனர். இருக்கையில் அமர்ந்த பின்னர் தலைமை நீதிபதி ரிஷ்கர் முகமது அமின் குற்றவாளிகளை ஒவ்வொருவராக அழைத்து விசாரணை நடத்தினார்.

கடைசியாக 68 வயது சதாம் உசேன் அழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையின் போது சதாம் உசேன் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் வாசிக்கப்பட்டது. அப்போது சதாம் உசேன் 'நான் குற்றமற்றவன், நான் அப்பாவி, ஷியா பிரிவினர் கொலையில் எனக்குஎந்த சம்பந்தமும் இல்லை' என்று கதறினார்.

பக்தாத்தின் முக்கிய பகுதியான பாராளுமன்றம், அமெரிக்கத் தூதரகம் உள்ள இடங்களில் இந்த நீதிமன்றம் அமைந்திருந்ததால் சதாம் ஆதரவாளர்கள் தாக்குதலில் ஈடுபடலாம் எனக் கருதி ஏராளமான இராணுவ வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பக்தாத் முழுவதும் ஒரே இராணுவ வீரர்களாக காணப்பட்டனர். (ற)

## போக்குவரத்தை ஒழுங்குபடுத்த பின்லேடன் -சதாம் சுவரொட்டிகள்

போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், மக்களுக்கு அறிவுரை வழங்கவும் பின்லேடன், சதாம் உசேன் படங்களை மெக்சிக்கோவில் பயன்படுத்துகிறார்கள்.

மெக்சிகோவில் போக்குவரத்து நெருக்கடி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதேபோல அரசு அலுவலகங்களிலும் பொலிஸ்துறையிலும் இலஞ்சம் அதிகரித்து வருகிறது. இதைக் கட்டுப்படுத்த மெக்சிகோ அரசு இப்போது புதிய உத்தியை கடைப்பிடித்து வருகிறது.


போக்குவரத்து நெருக்கடி அதிகமாக உள்ள பகுதிகளில் பாதசாரிகளுக்கும், வாகன ஓட்டுநர்களுக்கும் எச்சரிக்கை விடுத்தும், அறிவுரை கூறியும் சுவரொட்டிகள் மற்றும் அறிவிப்புப் பலகைகளை வைத்திருக்கிறார்கள்.

ஆனால், இந்த அறிவுரைகள் பொதுமக்களைக் கவர வேண்டும் என்பதற்காக அறிவுரை வாசகங்களை முக்கிய பிரமுகர்கள் கூறுவதுபோன்று அவர்களது படத்தையும் வைத்துள்ளனர்.

அன்னை தெரசாவின் படத்தைப் போட்டு 'பொலிஸ் அதிகாரிகளுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் இலஞ்சம் கொடுக்காதீர்கள், நேர்மையைக் கடைப்பிடியுங்கள்' என்ற வாசகம் எழுதிவைக்கப்பட்டுள்ளது.

இதே போல சதாம் உசேன் படத்தைப் போட்டு 'சாலை விதிகளை மீறாதீர்கள். வாகனங்களை பாதுகாப்பாக ஓட்டுங்கள்' என்று கூறுவது போல சுவரெட்டிகளை ஒட்டிவைத்துள்ளனர். பின்லேடனும் தன் பங்குக்கு 'பாதசாரிகள் நடைபாதையில் தான் செல்ல வேண்டும், கண்ட இடத்தில் வீதியைக் கடக்காதீர்கள்' என்று அறிவுரை கூறுகிறார்.

விரைவில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், சர்வாதிகாரி ஹிட்லர் ஆகியோரும் அறிவுரை கூறப்போகிறார்கள். அவர்களது சுவரொட்டிகளும் தயாராகி வருகின்றன. (ற)



அமெரிக்காவில் உள்ள மேரிலேண்டில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக நேற்று உளவுத்துறையினர் எச்சரித்ததையடுத்து அவசர அவசரமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பால்டிமோர் நகரில் போக்குவரத்து முற்றிலும் தடைசெய்யப்பட்டது. போர்ட் மெக்கென்ரி மேம்பாலத்தில் வாகனங்கள் ஸ்தம்பித்துள்ளதைப் படத்தில் காணலாம்.



பெரு நாட்டில் அதிசயங்களின் கடவுள் (யேசு) கடந்த புதன்கிழமை பிரம்மாண்டமாகக் கொண்டாடப்பட்டது. லிமாவில் நடந்த ஊர்வலத்தில் ஏராளமான கத்தோலிக்கர்கள் கலந்து கொண்டனர்.

## தொற்று நோய்கள் பரவுவதால் பூகம்ப பலி அதிகரிக்கும் அபாயம்

தொற்றுநோய் பரவும் அபாயம், படுகாயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாத நிலை, பூகம்ப அதிர்ச்சியால் மனதளவில் பாதிக்கப்பட்டவர்கள் ஆகிய பிரச்சினைகளால் பாகிஸ்தானில் பூகம்ப பலி அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

பாகிஸ்தானில் கடந்த 8ஆம் திகதி பூகம்பம் ஏற்பட்டதில் வடமேற்கு எல்லைப் பகுதி மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. இதுவரை 80ஆயிரம் பேர் இறந்துள்ளனர். பூகம்ப பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் தற்போது மீட்பு மற்றும் நிவாரணப் பொருட்கள் வழங்கும் பணி தீவிரமாக நடந்துவருகிறது.

இருப்பினும், இமயமலை அடிவாரத்தில் அமைந்துள்ள பல கிராமங்களுக்கு மீட்புக்குழுவினர் இதுவரை செல்ல முடியவில்லை. அங்கு இடிபாடுகளில் சிக்கி இறந்தவர்களின் உடல்களை யாரும் அகற்றவில்லை. குடிநீர் மாசடைந்துள்ளது. இதனால் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதேபோல் படுகாயம் அடைந்தவர்களில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு இன்னும் முறையான சிகிச்சை அளிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது தவிர, பூகம்ப அதிர்ச்சியாலும், உறவினர்களை இழந்ததாலும் பலர் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் முறையான சிகிச்சை அளிக்கப்படவில்லை. இதனால் பாகிஸ்தானில் பூகம்ப பலி மேலும் அதிகரிக்கும் என்று [illegible] புக்குழுவினர் தெரிவித்துள்ள[illegible] (ற)

# சச்சின் 23

## மீள் பார்வை

என்.சொக்கன்

### ஒரு புயலின் கதை

88ரன்களில் ஆட்டமிழந்து பெவிலியனுக்குத் திரும்பிய சச்சின், அதன்பின் ரொம்ப நேரத்துக்குப் பிழியப்பிழிய அழுதுகொண்டிருந்தான். அணி வீரர்கள் அத்தனை பேரும் அவனைச் சூழ்ந்து கொண்டு சமாதானப்படுத்தியும் கூட அவனால் தன்னை தேற்றிக்கொள்ள முடியவில்லை. உலகச் சாதனையை இழந்தது, சதம் அடிக்காமல் போனது, இதையெல்லாம் விட அவன் மனத்தை அதிக மாக உறுத்தியது -அவசியமில்லாத நேரத்தில், அதுவும் அதி சாதாரணமான முறை யில் ஆட்ட மிழந்து விட்டோமே என்கிற சோகம் தான். 'கொஞ்சம் நிதானமாக ஆடியிருந்தால் என்னால் நூறு ரன்களும், அதற்கு மேலும் கூட அடித்திருக்க முடியும். ஆனால் நான் ரொம்பவும் அவசரப்பட்டு விட்டேன்' என்று ஒரு வீடியோ பேட்டியில் வருத்தத்துடன் குறிப்பிட் டான் சச்சின்.



தனது இரண்டாவது டெஸ்ட் தொடரில் சச்சின சம்பாதித்த முக்கிய அனுபவம் அந்தச் சமயத்தில் உலகின் முதல்நிலை பவுலரான சர். ரிச்சர்ட் ஹாட்லியின் பந்துவீச்சை சந்தித்ததும், அவரிடமே பாராட்டு பெற்றதும் தான். 'இத்தனை சின்ன வயதில், பெரியவர்களுக்கான டெஸ்ட் போட்டிகளில், கடினமான சூழ்நிலைகளையும் சமாளித்து ஆடுவதே சச்சினின் பெரிய சாதனை. சாதாரண கிரிக்கெற்றர்களிடம் நாம் பார்க்கமுடியாத அற்புதமான பல தகுதிகள், திறமைகள் பல, இவனிடம் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன' என்று புகழ்ந்தார் ஹாட்லி.

டெஸ்ட் தொடரை அடுத்து இந்தியா-நியூஸிலாந்து-ஆஸ்திரேலியா அணிகள் கலந்துகொண்ட முத்தரப்பு ஒருநாள் போட்டிகள் நடைபெற்றன.

டுனீடின் நகரத்தில் இந்தியா-நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டி. சச்சினுக்கு இது இரண்டாவது ஒருநாள் போட்டி. ஆனால் துரதிர்ஷ்டம் முதல் போட்டிய்யைப் போலவே இதிலும் அவன் பூஜ்ஜியத்தில் ஆட்டமிழந்தான்!

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அடுத்த போட்டியின் போது சச்சினை அணியிலிருந்து நீக்கியது நிர்வாகம். அதன்பின் என்ன நினைத்தார்களோ, அடுத்த போட்டிக்கு மீண்டும் அவனைச் சேர்த்துக கொண்டார்கள்!

மார்ச் 6ஆம் திகதி வெலிங்டனில் நியூஸிலாந்துக்கு எதிராக நடைபெற்ற அந்த ஆட்டத்தில் தான், ஒருநாள் போட்டிகளில் சச்சின் தனது முதல் ரன்னை எடுக்க முடிந்தது. தனது வழக்கமான பாணியில் விளையாடிய சச்சின், முப்பத்து ஒன்பது பந்துகளில் முப்பத்து ஆறு ரன்கள் எடுத்தான். அந்தப் போட்டியில் ஒரு ரன் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது!

'ஜெயித்தாலும் மொட்டை, தோற்றாலும் மொட்டை' என்னும் விநோத வேண்டுதலைப் போல, அடுத்த போட்டிக்கு சச்சினை அணியிலிருந்து தூக்கியது நிர்வாகம். ஒழுங்காக விளையாடிய பிறகும் தனக்கு உரிய வாய்ப்புக்கள் கிடைக்காததால் சச்சினுக்குப் பெருத்த மனத் தளர்வு உண் டானது. அந்தப் போட்டியில் ஆஸ்திரேலியாவிடம் இந்தியா தோற்க, இறுதிப் போட் டிக்குத் தேர்வு பெறாமல் வெளியேறியது. அடுத்தாக வந்த ஷார்ஜா போட்டிகளிலும் சச்சின் சரியாக விளையாட வில்லை. இந்திய அணியும் பயங்கரமாக அடிபட்டுக் கொண்டு காயங்களுடன் திரும்பியது.

இந்திய அணியின் அடுத்த கிரிக்கெற் பயணம் இங்கிலாந்துக்கு. அதற்கான ஆயத்தங்கள் துவங்குவதற்கு முன்பே, சச்சின் இந்தச் சுற்றுப் பயணத்துக்குத் தேர்வாகமாட்டான் என்னும் வதந்தி பரவ ஆரம்பித்தது.

### 8.புதிய நட்சத்திரம்

இங்கிலாந்து செல்லும் இந்திய அணியில் சச்சின் இடம் பெறுவது சந்தேகமே என்னும் பேச்சு கிரிக்கெற் வட்டாரங்களில் மெல்லப் பரவிக் கொண் டிருந்தது, இதற்கு முக்கியக் காரணங்க ளாகச் சொல்லப்பட்ட விஷயங்கள் இரண்டு: நியூஸிலாந்து தொடரின் போது ஒரே ஒரு டெஸ்ட் போட்டியைத் தவிர மற்ற இரண்டிலும் அவன் சரியாக விளையாட வில்லை. போதாக்குறைக்கு பாகிஸ்தானில் ஒன்று, நியூஸிலாந்தில் இரண்டு, ஷார்ஜாவில் இரண்டு என்று அதுவரை விளையா டிய ஐந்து ஒரு நாள் போட்டிகளிலும் சேர்த்து, மொத்தம் அறுபத்து ஆறு ரன்கள் மட்டுமே எடுததிருந்தான் சச்சின். சரா சரியாக ஒரு போட்டிக்கு பதின் மூன்றே ரன்கள்!




சச்சினின் மூன்று தொடர்களையும் அலசிய சில கிரிக்கெற் பத்திரிகைகள், 'திறமைசாலிப் பையன் தான. ஆனால் அனுபவம் போதாது. இப்போதைக்கு மீண்டும் உள்ளூர்ப் போட்டிகளில் நிறைய ஆடிப் பழகட்டும். கொஞ்ச நாளான பிறகு மறுபடி அணியில் சேர்த்துக் கொள்வதைப் பற்றி யோசிக்கலாம்' என்னும் ரீதியில் விமர்சனக் கட்டுரைகள் வெளியிட்டன. கூட்டிக் கழித்துப் பார்க்கிற போது இங்கிலாந்தில் சச்சின் விளையாடுவது நிச்சயம் இல்லாதது போல் தோன்றியது.

ஆனால் இந்த ஊகங்களையெல்லாம் மீறி, சச்சின் அந்தத் தொடருக்குத் தேர்வு செய்யப்பட்டான். ஸ்டார் கிரிக்கெற் க்ளப்புடன் ஏற்கனவே இங்கிலாந்தில் இரண்டு முறை சுற்றுப் பயணம் செய்து விளையாடிய அனுபவம் இந்த முறை அவனுக்குக் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையுடன், இந்திய கிரிக்கெற் தேர்வுக் குழு அவனுக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்க தீர்மானித்தது. சச்சின் அந்த வாய்ப்பை இரு கைகளாலும் இறுகப் பற்றிக் கொண்டான் என்றுதான் சொல்லவேண்டும்!

தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இங்கிலாந் துக்கு வந்திறங்கிய சச்சின், பயிற்சி ஆட்டங்களில் சிறப்பாக விளையாடினான். இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் சச்சினின் அதிரடியான ஆட்டம் (26பந்துகளில் 31ரன்கள்). இந்தியாவின் வெற்றிக்கு உதவியதோடு, இங்கிலாந்து பத்திரிகைகளின் ஒருமனதான பாராட்டுகளையும் பெற்றது. *(தொடரும்)*


## மஹிந்தவின் சிந்தனைகளே விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கம்

### தேர்தலுக்கான கொள்கைப் பிரகடனம் அதுவல்ல என்கிறார் ரணில்

(கொழும்பு)

"மஹிந்தவின் சிந்தனைகள்" என்ற பெயருடன் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டிருப்பது ஜனாதிபதித் தேர்தலுக்கான அவரது கட்சியின் கொள்கைப் பிரகடனம் அல்ல.

பெயரைப் போலவே அது அவரது தனிப்பட்ட சிந்தனையே ஆகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் ஜனா திபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



கேகாலை மாவட்ட ரம்புக்கனை தேர்தல தொகுதியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கடசியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனிப்பட்டவர்களின் சிந்தனைகளுக்கு மக்கள் வாக்களிக்கத் தயார் இல்லை. இது சோமவன்ஸ அமரசிங்கவின் கொள்கையா? ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையா? எனத் தெரியவில்லை.

எந்தவொரு நபருக்கும் தனியான சிந்தனை இருக்கும் என்பதை நான் ஏற்கனவே எழுதிய "அரசியலும் தர்மமும்" என்ற நூலில் சுட்டிக்காட்டியுள்ளேன். இருந்தபோதும் எனது சிந்தனைகளை தெரிவித்ததற்காக எனக்கு வாக்களிக்குமாறோ, ரணிலின் சிந்தனைகள் என்றோ நான் கூறி மக்களிடம் வாக்கு கேட்கவில்லை.

மக்களின் பிரச்சினை, அதற்கான தீர்வு என்பவற்றை மக்களின் பங்களிப்புடனேயே முன் வைத்து ஆதரவைக் கோருகிறேன்.

செய்ய முடிந்தவற்றையே நான் செய்வேன். மற்றவர்கள் போல வானத்தில் பறப்பேன் என்றெல்லாம் நான் கூறமாட் டேன் எனவும் ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

## பைசல் முஸ்தபா ரணிலுக்கு ஆதரவு?

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதியமைச்சர் பைசல் முஸ்தபா எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கி ரமசிங்கவை ஆதரிக்கத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன.

இரு பிரதான வேட்பாளர்களின் தேர்தல் கொள்கைப் பிரகடனங்களை தான் தொடர்ந்து ஆராய்ந்து வருவதாகவும் அடுத்த வாரமளவில் யாரை ஆதரிப்பதென்ற தனது முடி வை வெளியிடவுள்ளதாகவும் பைசல் முஸ்தபா தெரிவித்தார். (ந)

## இராமகிருஷ்ண மிசன் பவளவிழாவில் 'வாழ்வக' மாணவர்களின் இசைநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு இராமகிருஷ்ண மிசன் ஸ்தாபிக்கப்பட்டு, 75 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளதை முன்னிட்டு இன்றும் நாளையும் பவளவிழா நிகழ்வுகள் எளிமையாகவும், ஆன் மீகச் சிறப்புடனும் கொண டாடப்படவுள்ளன.

கொழும்பு இராமகிருஷ்ண மிசன தலைவர் ஸ்ரீமதி சுவாமி ஆத்மகணானந்தஜி மகராஜ் தலைமையில் இரு நாட்களும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. ஆசியுரை, வரவேற்புச் சிறப்புரை என்பனவற்றை நிகழ்த்துவதற்கு செங்கல்பட்டு இராமகிருஷ்ண மிசன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விருபாஷானந்தஜி மகராஜ், பெங்களூர் இராமகிருஷ்ண மிசனின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி கீர்த்திநானந்தஜி மகராஜ் ஆகியோர் இந்தியாவிலிருந்து வருகை தரவுள்ளனர்.

அத்துடன், கொழும்பு இராமகிருஷ்ண மிசனின் வழிநடத்தலில் கொழும்பின் சில பகுதிகளில் செயற்படும் அறநெறிப் பாடசாலைகளினதும், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிசனின் அறநெறிப் பாடசாலையினதும் மாணவர்களின் பல்வேறு ஆன்மீக நிகழ்ச்சிகளும், "இலங் கையில் இராமகிருஷ்ண மிசன் செயற்பாடுகள்" என்ற பவள விழா சிறப்புமலர் வெளியீடும் நடைபெறவுள்ளன.

மேலும், சிறப்பு நிகழ்வாக இன்று சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு யாழ்ப்பாணம் சுன்னாகத்திலுள்ள 'வாழ்வகம்' விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தின் மாணவர்களின் பஜனைப் பாடல்கள், பக்தி கீதங்கள் அடங்கிய இசைநிகழ்வு நடை பெற வுள்ளது.

ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்தஜி மகராஜின் அழைப்பின் பேரில் யாழ். தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தினர் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர். பார்வைக் குறைபாடு இருந்தாலும், கேட்போரின மனதை உருக்கும் வண்ணம் பாடக் கூடிய ஆண், பெண் மாணவர்கள் ஜனாதிபதி தங்கப் பதங்கங்கள் உட்படப் பல பரிசில் களையும், பாராட்டுதல்களையும் பெற்ற செல்வன் ஜெகதீசனின் தலைமையில் இந்த இசைநிகழ்வை வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்ச்சியை அனைவரும் கண்டுகளித்து உற்சாகப்படுத்துவதுடன், உதவும் உள்ளங்களால் வாழ்வகம் விழிப்புல வலுவிழந் தோர் இல்லத்திற்கு முடிந்தளவு நிதி யுதவி வழங்கினால் நற்காரியமாக வும் அமையுமென ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரம இணைச்செயலாளர் கேட்டுள்ளார். (ந)

## சிறுவர் கலைக் கதம்பம்

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்சமூக செயற்பாட்டு மையம் நடாத்தும் சிறுவர் கலைக் கதம்பும் இன்று மாலை 2.45மணி முதல் 6.00மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது,

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண யுனிசெவ் திட்ட அலுவலர் திருமதி யூடித் புறூனோவும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், தென்மராட்சி வலயக் கல்விப பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பற்றிக் டிறஞ்சன், கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலதேவி சாந்தசீலன், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகி, உடுவில் பிரதேச செயலாளர் எஸ். திருவாகரன், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் முரளீதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (து-58)

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 22 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்களின விபரம் வருமாறு,

கயானா செந்திநாதர்- 163, சரிநியா சிறிரவீந்திரா- 152, பிரியங்கா சிறிதரன்- 150, யதுர்சா சிவயோகரத்தினம்- 147, பீற்றர் விக்ரர் டிலிங்ரன்- 144, ரஞ்ஜினி சுந்தரமூர்த்தி- 144, றிசாந்தினி புண்ணியராஜா- 142, சசிதா இந்திரசீலன்- 136,

மரியதாசன் கௌரிசங்கர்- 134, சிவானந்தன் நிரோஜன்- 133, சுரேநதிரன் சுபாங்கன்- 133, சுந்தரராஜலிங்கராஜ்- 133, காந்தருபவ்யதுசன-132, கிருபாகரன் விதுசாந்- 132, சஜானா சிவசுந்தரராஜா- 132,

கோபிதாசன் சாரங்கன்- 132, காயத்திரி ரவீந்திரன்- 132, பத்மநாதன் சிந்துஜன்- 131, தினிஸினி சுந்தரலிங்கம்- 131, ஆதர்ஸனா துரைராஜா- 130, டினிஜா தவயோகன்-126, நிருத்திகா மகேஸவரன்- 124. (ற)

# எளிய சொல் நடையும் கருத்துத் தெளிவும் கொண்டவை ச. வேயின் ஆக்கங்கள்

## பேராசிரியர் சபா ஜெயராசா புகழாரம்

(யாழ்ப்பாணம்)

“ஈழத்தில் அதிகூடிய தொகைத தமிழ் நூல்களை எழுதியவர்களாகக் கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம், செங்கை ஆழியான், அமரா சொக்கன் ஆகிய மூவரும் கணிக்கப் பட்டுள்ளனர்.

இவர்களில் கவிதை, சிறுகதை, நாடகம், நாவல், கட்டுரை, இலக்கணம் எனச் சகல துறைகளிலும் நூல்களை ஆக்கியுள்ளவரான கவிஞர் பஞ்சாட்சரம் இன்று இவ் விழாவில் ஒரு கவிதை நாடக நூலை தமிழுக்குத் தருகின்றார். அவரது கவிதைகளில் பொதுவாக கா[illegible] [illegible]புக்கள் எளிமை யா[illegible] [illegible]யும், கருத்துத் தெளிவும் எ[illegible].

எழுத்தறிவில் ஆரம்பநிலையில் உள்ள ஒரு வாசகனும், இலகுவில் படித்து விளங்கவும் வாசிக்கவும் கூடியவை அவரது படைப்புக்கள். இன்றைய மொழி பற்றிய சிரத்தை குறைந்துள்ள சமூகத்தின் குறைபாட்டை நிவர்த்திக்க பஞ்சாட்சரம், பாநாடகங்கள் போன்ற எளிய நடையில் அமைந்த நூல்கள் ஏராளமாக எழுதப்படவேண்டும். கவிஞர் பஞ்சாட்சரத்தின் அரை நூற்றாண்டு காலமான இடையறாத இலக்கியச் செயற்பாடு பாராடடிக் கௌரவிக்கப்படவேண்டும்”.

மேற்கண்டவாறு அண்மையில் இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெற்ற பண்டிதர் ச.வே.பவின் “பஞ்சாட்சரம் பா நாடகங்கள்” நூல் வெளியீட்டு விழாவில் நூலை வெளியிட்டு வைத்து வெளியீட்டுரை நிகழ்த்திய பேராசிரியர் சபா.ஜெயராசா குறிப்பிட்டார்.

ஆசியுரையைப் புலவர் பார்வதிநாதசிவமும், வாழ்த்துரைகளை செஞ்சோற்செல்வர் ஆறுதிருமுருகன், யாழ்.பல்கலைக்கழக வணிக பீடாதிபதி க.தேவராசாவும், நூல் ஆய்வுரைகளை பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோண்மணி சண்முகதாஸ் ஆகியோரும், வரவேற்புரையை ந.பரமேஸ்வரனும், பதிலுரையை நூலாசிரியரும், நன்றியுரையினை அறிவாலயச் செயலாளர் சு.சண்முககுமாரும் வழங்கினர்.

ஏராளம் இலக்கிய ஆர்வலர்கள், அறிஞர்கள் திரண்டிருந்த இவ் விழாவில் இணுவில் வேதாகம பாடசாலை அதிபர் சிவஸ்ரீ.தா.மகாதேவக் குருக்களால் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (ற)

# கட்டுப்பாட்டினை இழந்த ஹண்டர் மதிலை உடைத்து வீட்டினுள் புகுந்தது

(வல்வெட்டித்துறை)

ஹண்டர் வாகனமொன்று கட்டுப் பாட்டினை இழந்து மதிலை உடைத்துக்கொண்டு வீட்டுக்குள் புகுந்ததில் சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 5.00 மணிக்கு வல்வெட்டித்துறை வேம்படிச் சந்தியில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் துன்னாலை தெற்கைச் சேர்ந்த ஜெகநாதன் தவராசா (வயது-25), துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த ஆனந்தம் ஜெயராசா (வயது -28) ஆகியோர் படுகாயமடைந்து வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-4)

# சமுர்த்தி அமைப்புக்கு சலுகைகளை வாரி வழங்கும் ‘மஹிந்தவின் சிந்தனை’

ஜனாதிபதி வேடபாளர் மஹிந்த ராஜபக்ஷ தனது ‘மஹிந்தவின் சிந்தனை’ அறிக்கை மூலம் சமுர்த்தி இயக்கத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்துள்ளார்.

மக்களை வலுப்படச் செய்வதற்கும் பட்டினியை இல்லாதொழிப்பதற்கும் ஏற்ற விதத்தில் சமுர்த்தித் திட்டம் ஒரு சிறந்த திட்டமாக மாற்றியமைக்கப்படுவதற்கு மஹிந்தவன் சிந்தனைத் திட்டத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சமுர்த்தி உதவி பெறுவோருக்கான மாதாந்தக் கொடுப்பனவை 5ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் முன்னூறு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மகப்பேற்றின் போது வழங்கபடும் 2 ஆயிரத்து 500 ரூபா கொடுபனவு 5ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும்.

சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்தில் மரணம் சம்பவிக்கும் போது வழங்கப்படும் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும்.

சமுர்த்திக் குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் கொடுப்பனவு 50 வீதத்தினால் அதிகரிக்கப்படும்.

சமுர்த்தி உதவி பெறும் குடும்பத் தலைவர் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காப்புறுதித் திட்டமொன்றுக்கு உரித்துடையவர் ஆவார்.

வீட்டுத் தலைமை உறுப்பினர் காலமாகும் போது அல்லது வலது குறைந்தவராகும் சந்தர்ப்பத்தில் அவரது குடுமபத்துக்கு வருமானம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் விடயத்தில் உத்தரவாதம் அளிக்கப்படும் எனவும் ‘மஹிந்தவின் சிந்தனை’யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்தவரது விவசாய உற்பத்திகளை விலைகொடுத்துப் பெற்றுக்கொள்வதற்கு அரசு மத்தியஸ்தம் வகிக்கும்.

இதேபோன்று சமுர்த்தி வங்கியலிருந்து கடன்கள் பெற்றுக்கொளளும் விடயத்திலும் பல சலுகைகள வழங்கப்படும் என்று ‘மஹிந்த சிந்தனை’ கொள்கைத் திட்டம் விளக்கியுள்ளது. (து-7)

# நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் - II

## (நீகோட் ~II)

நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆ.அ.வ கடன் இல:- 2168 - சிறீ (எஸ்எவ்)

## கேள்வி அறிவித்தல் - இல: 58

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் (NECORD - II) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (“ஆ.அ.வ”) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும் படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னால் தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலை வரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

### அட்டவணை

| தொ. இல | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆக குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம (ரூபா ) |
|---|---|---|---|---|
| 01 | NEP/NECORD-II/ID/01 | திருகோணமலை உப்புவெளி முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலைய மூன்று மாடி நிர்மாணம். | M4 கட்டடங்கள் | 260,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD டுடன் M7க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. “ICTAD” வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தக்காரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட புதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை திட்டப் பணிப்பாளர், நீகோட் திட்டம், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-2227434. ஃபக்ஸ்: 026-2227401. இணையதள முகவரி: www.necord.org ஈமெயில்: necord@sltnet.lk)

6. கேள்வி ஆவணங்களை 21.10.2005 இலிருந்து 07.11.2005 வரை காலை 9.30 இலிருந்து மாலை 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 2,000/- ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

7. இரு பொறிவைக்கபபட்ட உறைகளில் தனியாகச் சமாப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்படட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பீட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச் சபை, “நீகோட்”, 55, கந்தசுவாமி கோவில் வீத', திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு, 14.11.2005 காலை 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

9. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 07.11.2005 ஆம் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**த.லங்காநேசன்,**
தலைவர், கேள்விச் சபை,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம்,
55, கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.

(அ- C/1753)

# அழிவை ஏற்படுத்தும் இன, மத ரீதியான அரசியல்

(கொழும்பு)

பல இனமக்களையும், மதங்களையும் உள்ளடக்கிய இலங்கை தனி ஒரு இனத்துக்கோ அல்லது ஒரு மதத்துக்கோ சொந்தமானது அல்ல. இந்த நாட்டின் ஒவ்வொரு நகர்வுகளிலும் வளர்ச்சியிலும் எல்லா இனமும் எல்லா மதமும் அளப்பரிய சேவையாற்றியமை கடந்த கால வரலாற்று உண்மையென இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் செயலாளர் எஸ்.சதாசிவம் தெரிவித்துள்ளார்.

அற்ப சலுகைகளுக்காக இந்த நாடு இனரீதியான, மதரீதியான அரசியல் பயணத்தைத் தொடருமானால் இந்த நாட்டின் அழிவினை எவராலும் தடுத்து நிறுத்தமுடியாது எனக் குறிப்பிட்ட அவர், இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி தமது கொள்கைகளை செயற்படுத்தவே மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளார். (து-7)

# நாரியில் விழுந்த தேங்காயால் நடக்க முடியாத நிலை

(சாவகச்சேரி)

குனிந்து நின்று முற்றம் கூட்டிக் கொண்டிருந்தபோது தென்னை மரத்திலிருந்து தேங்காய் ஒன்று நாரியில் விழுந்ததால் நடக்க முடியாத நிலையில் 23 வயது இளம் பெணணொருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படடுள்ளர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை வரணி கரம்பைக் குறிச்சியில் நடந்துள்ளது.

இதில் பாதிக்கப்பட்டவர் வரணி கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த ஜேசுரத்தினம் தர்சினி என்னும் யுவதி ஆவார். (து-108)

# கருத்தரியாமையின் காரணங்கள்

திருமணமாகி ஒரு சில வருடத்துள் ஒரு பெண்ணானவள் கருத்தரிக்கா விட்டால் வேதனையடையும் தம்பதியர், பிறர் இதைக் குறித்து விசாரிக்கும் போது அடையும் துன்பமும், தாழ்வுணர்ச்சியும் சொல்லில் அடங்காது. நமது நாட்டில் மருத்துவத்துறை எவ்வளவுதான் முன்னேறியிருந்தாலும் ஒரு தம்பதியினருக்கு குழந்தை இல்லை என்றால் மனைவியை மட்டும் மலடு என்ற கடுஞ்சொல்லால் சொல்லித் தாக்கும் வழக்கம் உள்ளது.

மருத்துவ கூற்றின்படி, கருத்தரியாமைக்கு பெண்கள் 30-40 சதவீதமும், ஆண்கள் 30-40 சதவீதமும், இருவரும் 20 சதவீதமும், எந்தக் குறையும் இன்றி 10-15 சதவீதமும் காரணமாக இருக்கிறது. இதிலிருந்தே பெண்கள் மட்டுமே முழுக்காரணம் இல்லை என்பது தெளிவாகிறது.

தாய் என்ற ஸ்தானத்தை இறைவன் பெண்ணுக்கு அளித்திருக்கிறார். ஆனால் பெண்ணால் மட்டுமே கருத்தரிக்கமுடியும் என்பதால் கருத்தரியாமைக்கு அவளை மட்டுமே காரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. குழந்தைப் பாக்கியம் வேண்டும் என்று சிகிச்சைக்குச் செல்வோர் கணவன்- மனைவி சகிதம் மருத்துவ ஆலோசனைக்குச் செல்லவேண்டும். முடிந்தளவு உங்களது உறவினர், நண்பர்கள் இதற்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டாம். எதிர்மறையான பரிசோதனை முடிவுகளை இயன்றளவு கணவன்-மனைவிக்குள்ளேயே வைத்திருத்தல் நலம்.

கருத்தரியாமை இரு வகைப்படுகிறது.

1.முதன்மையானது **(Primary Sub fertility).**

2.துணையானது **(Secondary Subfertility)**

திருமணமாகி ஒரு வருடத்திற்கு எந்தக் கருத்தடை சாதனமும் உபயோகிக்காமல் இருந்தும் கருத்தரிக்கவில்லை என்றால் அவர்கள் முதன்மையான கருத்தரியாமை என்ற பிரிவுக்குள் அடங்குவர்.

ஒரு குழந்தைக்குப் பிறகோ அல்லது கருச்சிதைவு அல்லது குழந்தை இறத்தல் அல்லது குழந்தை இறந்து பிறத்தல் ஆகியவற்றுக்குப் பிறகு கருத்தரிக்காதோர் துணையான கருத்தரியாமை என்ற பிரிவுக்குள் அடங்குவர்.

உலகில் பல்வேறு காரணங்களால் குழந்தையின்மையின் சதவீதம் அதிகரித்து வருவதாக அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

*** கரு எவ்வாறு உருவாகிறது** எனப் பார்ப்போம்.

1.கருமுட்டை வளர்ச்சி அடைதல் **(Maturation Ovum).**

2.கருமுட்டை வெளியேறுதல் **(Ovulation).**

3.கரு இணைக்குழாயில் முட்டை நுழைதல் **(Ovum enter the Fallopian tube)**

4.கரு இணைக்குழாயில் ஆணின் உயிரணுவுடன் கருமுட்டை இணைதல் **(Fertilization).**

5.ஜனித்த கரு கருப்பையில் பதிந்து வளர்தல் **(Implantation of Fertilized, Ovum and Development).**

போன்றவை நடக்கின்றன. இதில் எந்த ஒரு இடத்தில் குறை இருந்தாலும் கருத்தரிப்பு நடக்காது. பொதுவாக திருமணமானோர், திருமணமாக ஒரு வருடம் வரை தானாக கருத்தரிப்பதற்கு முயற்சி செய்யலாம். வயது முதிர்ந்து திருமணம் புரிவோர் வியாதிகள் இருப்போர் மட்டும் கூடிய விரைவில் பரிசோதனைகளை மேற்கொள்வது நல்லது.

***ஆணின் குறைகள்**

1.உயிரணுக்கள் இல்லாமை
2.விந்து நீரில் உயிரணுக்கள் குறைவு
3.விந்து நீர் வெளியேறுவதில் குறைபாடு
4.ஆண்மைக் குறைவு
5.ஓமோன்களின் சமநிலையின்மை

***பெண்ணின் குறைகள்**

1.கருமுட்டை உருவாவதிலும் வெளியேறுவதிலும் குறைபாடு.
2.கரு இணைக்குழாயில் அடைப்பு
3.கருப்பைக் கட்டிகள்
4.சூலக அழற்சி
5.கருப்பை நேர்ாக இருந்தல்
6.சூலக கட்டி
7.மாதவிடாய் இல்லாமை
8.வலியுடன் கூடிய மாதவிடாய்
9.அதிகளவு மாதவிடாய் வெளியேறுதல்
10.குறைந்தளவு மாதவிடாய் வெளியேறுதல்
11.ஓமோன்களின் சமநிலையின்மை

போன்றவை காரணங்களாக அமையலாம்.

மலடு என்ற வார்த்தையே இத்தகையோரைப் புண்படுத்தும். கணவன் - மனைவிக்குள் மனவேறுபாடு, உறவினர்கள், நண்பர்களால் ஏற்படும் மன உழைச்சல், தாழ்வுமனப்பான்மை, கோபம், இயலாமை இதனாலேயே பல உடல் உபாதைகள் ஏற்படும்.

மன அழுத்தத்தின் காரணமாக வயிற்றில் புண் **(Gastriculcer)** உயர் இரத்த அழுத்தம் **(High Blood Pressure)**, மாதவிடாய் கோளாறுகள் **(Menstnial Disorders)**, அமைதியின்மை **(Restless-ness)** போன்றவை ஏற்படலாம்.

இதைத் தவிர கருத்தரிக்காத பெண்களுக்கு கருப்பைக் கட்டிகள் **(uterine fibroids)**, மாதவிடாய் கோளாறுகள் **(Menstrual Disorders)**, மார்பக புற்று நோய் **(Carcinoma of the Breast)** கருப்பை புற்று நோய் **(Caricinoma of the uterus)** போன்றவை மற்றைய பெண்களை விட அதிக அளவில் ஏற்பட சாத்தியம் உள்ளது.

**நி.தர்ஷனோதயன்**
4 ஆம் வருடம், சித்தமருத்துவத் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

இவற்றிற்கான சிகிச்சை முறைகளைப் பார்ப்போமானால், முதலில் கருத்தரியாமைக்குரிய அடிப்படைக் காரணத்தை அடையாளப்படுத்தவேண்டும். பின்பு அதற்குரிய தீர்விற்கான வழிகளை ஆராயலாம். பொதுவான முறைகளை எடுத்துக் கூறுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. நம்பகமான மகப்பேற்று மருத்துவரை அணுகி அவரின் ஆலோசனைப்படி, சிகிச்சைகளை மேற்கொண்டு தாய்மைப் பேற்றை அடைவதே சிறந்த வழியாகும்.

# இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட மஹிந்தவின் விஞ்ஞாபனம் ஊடாக அழைப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் இந்திய அரசு மீண்டும் தலையிட வேண்டுமென மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை அழைப்பு விடுத்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் தமிழர் தயாகம் - சுயநிர்ணய உரிமை - தன்னாட்சி நிர்வாக யோசனைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன் ஒற்றையாட்சி முறையின் அடிப்படையிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படுவதுடன், பொதுக்கட்டமைப்பு கைவிடப்படும். ஜெயலங்கா என்ற அனைத்துக் கட்சியினர் பங்கேற்கும் அனைத்து கட்டமைப்பின் மூலம் ஆழிப் பேரலை மீளமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுமெனவும் மஹிந்தவின் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை இனப்பிரச்சினையில் சர்வதேச சமூகத்தின் தலையீட்டிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீடு பாரியளவில் இருக்க வேண்டுமெனவும் இது தொடர்பாக இந்திய அரசுடன் விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் அதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகள் பிரிவினையைக் கைவிட வேண்டும், ஆயுதங்களை கைவிட வேண்டும், ஜனநாயக நீரோட்டத்தில் இணைய வேண்டும், இறுதித் தீர்வுக்கு இணைய வேண்டும், இதனை நடைமுறைப் படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றுடனான உறவை வலுப்படுத்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதோடு அடுத்த ஆறு ஆண்டுகளில் 8 வீத பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல விடயங்கள் மேற்கொள்ளப்படுமெனவும் அத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

# சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள பாகிஸ்தான் விருப்பம் தெரிவிப்பு

பாரிய பூகம்பம் ஏற்படுத்திய பேரழிவுகளைத் தொடர்ந்து நிவாரணப் பணிகளை பாகிஸ்தான் முன்னெடுத்து வரும் நிலையில் அடுத்தமாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ள சார்க் நாடுகளின் ஏழாவது மாநாட்டில் கலந்து கொள்வதற்கு பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் கலந்து கொள்ளவுள்ளன.

இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்ட சார்க் மாநாடு அடுத்த மாதம் 12ஆம் திகதி டாக்காவில் ஆரம்பமாகவுள்ளது.

மாநாட்டிற்கான சகல ஏற்பாடுகளும் பாதுகாப்பு ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சார்க் மாநாட்டை இவ்வருடம் ஜனவரி மாதம் 9ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையில் நடாத்த ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் சுனாமி அனர்த்தம் காரணமாக இது ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-7)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(கற்கோவளம்)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவ காலத்தின் போது சேவையில் ஈடுபட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைப் பிரிவுத் தொண்டர்களைக் கௌரவித்து சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் பருத்தித்துறைப் பிரிவு காரியாலயத்தில் தலைவர் சூ.தவராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (த-104)

## பரிசளிப்பு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் யூனியன் சிறப்பு மலர் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் சு.புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக லண்டன் வாழ் பழைய மாணவர் பொறியியலாளர் செ.பத்மநாதானும், தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிபபாளர் ச.கைசாலநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரிசில்களை திருமதி தவமணி விக்னேஸவரன் வழங்கவுள்ளார். (ற-9)

## கட்டுமரங்கள் வழங்கப்பட்டன

(கற்கோவளம்)

சுனாமிப்பேரலையால் பாதிப்படைந்த பருத்தித்துறை முனை கடற்றொழிலாளர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு இலங்கையின் உதவியுடன் சர்வோதய நிறுவனம் 15 கட்டுமரங்களை கடந்த புதன்கிழமை மாலை முனையில் வைத்து வழங்கப்பட்டது. (த-104)

## மந்திகை வைத்தியசாலையில் சிரமதானப்பணி

(மருதங்கேணி)

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய சாரண மாணவர்கள் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இரு நாட்கள் சிரமதானத்தை மேற்கொண்டனர்.

சிரமதானப பணியை மேற்கொண்ட சாரணர்களுக்கு மாவட்ட வைத்திய அதிகாரி சிகதர்வேற்பிள்ளை பாராட்டுத் தெரிவித்தார். (து-35)

# குழந்தைகளுக்கு தடுப்பு மருந்தூட்டலின்போது அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும்

## தொற்று நோயியல் வைத்திய அதிகாரி வேஜினி வற்புறுத்தல்

(சுதுமலை)

குழந்தைகளிற்கு தடுப்பு மருந்தூட்டலின் போது சுகாதார உத்தியோகத்தர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார் கொழும்பு சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் உயர் வைத்திய அதிகாரி டாக்டர் வேஜினி.

கடந்த வார இறுதியில் யாழ். பிராந்திய சுகாதார சேவை அலுவலகத்தில் சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் தடுப்பு மருந்தூட்டல் தொடாபான பயிற்சிக் கருத்தரங்கு நடைபெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 250க்கும் அதிகமான தடுப்பு மருந்தூட்டல் கடமையில் ஈடுபடும் சுகாதார உத்தியோகத்தர்கள் இக்கருத்தரங்கு நிகழ்வில் பங்கு பற்றினார்கள்.

இதில் கருத்துரை வழங்கிய வைத்திய அதிகாரி,

எந்த ஒரு தடுப்பு மருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட நாள் முதல் ஒருவருக்கு அல்லது குழந்தைக்கு ஏற்றும் வரைக்கும் உரிய முறையில் குளிர்சங்கிலித் தொடாரில் வைத்து நன்கு பராமரிக்க வேண்டும் எனவும் அப்போதுதான் மருந்தூட்டலில் முக்கியத்துவத்தை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் வலியுறுத்தினார்.

மேலும் வைத்தியசாலைகளிலும், சுகாதாரப் பணிமனைகளிலும், மருந்து களஞ்சியப்படுத்தும் குளிர்சாதனப் பெட்டிகள் திருப்திகரமாய் இயங்குவதை தினமும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும், சிகிச்சை நிலையங்களிலும் வைத்தியசாலைகளிலும் தடுப்பு மருந்தூட்டும் போது சரியான முறையில் திட்டமிட்டு இடம் ஒழுங்குசெய்யப்பட்டு உரியவகையில் தடுப்பு மருந்துகளை ஏற்ற வேண்டும் எனவும் இதன்மூலம் மருந்து விரயமாவதைக் கூட தடுக்கமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் தொற்றுநோயியல் பிரிவின் வைத்திய அதிகாரி சியானி மற்றும் யாழ். மாவட்ட தாய் சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சொலமன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். இப்பயிற்சிக கருத்தரங்குகளிற்கான ஏறபாட்டை யுனிசெவ் நிறுவனம் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (து-252)

அறிவாளி ஒருமுறைதான் ஏமாற்றப்படுவான். முட்டாளோ பலமுறை ஏமாற்றப்படுவான்.

அப்துற் றஹீம்

வலம்புரி

# ஜனாதிபதியின் கோபாவேசம் எரிமலையாய் வெடிக்குமா?

எதிர்வரும் நவம்பர் 17 ஆம்திகதி நடைபெறப் போவது ஜனாதிபதித் தேர்தல் மட்டுமல்ல, அது இந்த நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தலாக உள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக இடம்பெற்ற சமாதான முயற்சிகள், அதன் பயனாக ஏற்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை அனைத்தும் சின்னாபின்னமாக்கப்படும் அளவில் தேர்தல் நிலைமைகள் உள்ளன.

ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்த மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்போது மகிந்தவின் பிரசாரக்கூட்டங்களில் பரப்புரை செய்து வருகிறார்.

கூடவே அநுரா பண்டாரநாயக்காவும் பிரசாரக்கூட்டங்களில் காணக்கூடியதாக உள்ளது. மறுபுறத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கத்திலும் பிரசாரப்பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

இலங்கை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவும் உண்டு.

இவ்விதம் இரண்டு பிரதான கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களும் களத்தில் இறங்கி வெற்றியை தமதாக்கிக் கொள்வதில் அதிதீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில்,

வெற்றியை நிர்ணயிப்பவர்கள் நாமே என்ற இறுமாப்போடு ஸ்ரீமான் பொதுஜனங்கள், நவம்பர் 17 ஆம் திகதியை வரவேற்க காத்திருக்கின்றனர்.

தேர்தல் களநிலைமைகள் நாலா பக்கமும் சூடு பிடித்துள்ள நிலையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் இனம்புரியாத ஆத்திர மேலீட்டால் வேகம் கொண்டு என்ன செய்வதென்று தெரியாது திணறுகிறார்.

தேர்தலில் போட்டியிடும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவோ அன்றி எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவோ ஆத்திரம் கொண்டால் அது பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளத்தேவையில்லை.

ஆனால் இங்கு ஆத்திரம் கொள்பவர் சர்வ வல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட மேன்மை தாங்கிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அவர்கள்.

அவரின் வேக்காரத்தின் விளைவால் என்ன நடக்குமோ, ஏதுவருமோ என்ற ஏக்கம் அரசியல் அவதானிகளிடம் இல்லாமலும் இல்லை.

மகிந்தவின் பிரசாரக் கூட்டங்களில் அவர் கலந்து கொண்டாலும் அவரிடம் இருக்கக்கூடிய கோபம், வேகம், வெறுப்பு என்பவற்றுக்கான காரணம்,

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது கருத்துக்கு செவிசாய்க்காது நடந்துகொள்கிறார் என்பதா அல்லது ஆட்டி அடக்கிவித்த நான் இன்னும் ஒரு சில மாதங்களில் அடங்கிப்போய் எந்த அதிகாரமற்று இருக்கப்போகிறேன் என்ற பயத்தினாலா என்பது புரியாத விடயமாகவே உள்ளது.

எதுவாயினும் ஜனாதிபதித் தேர்தலுக்கிடையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கோபம் இலங்கை அரசியலில் எரிமலையாய் வெடித்தாலும் அதுபற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை.

எதற்கும் காலமே பதில் கூறவேண்டும்.

# புலிகள் தொடர்பில் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் குறித்து விளக்கமளிக்க வேண்டும்

## மஹிந்தவிடம் கோருகிறது முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகள் கடுமையாக விமர்சனம் செய்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,

ஒற்றையாட்சி முறையின் கீழ் அதிகாரப் பகிர்வு என்பது சாத்தியமல்ல. ஒற்றையாட்சியின் கீழ் தமிழர் இனப் பிரச்சினைனக்குத் தீர்வுகாண முடியாது என்பதை 50ஆண்டு காலத்துக்கு முன்பே தமிழர்கள் நிராகரித்துவிட்டனர்.

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு என்பது தமிழர்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கான ஒரு சிறிய கட்டமைப்பு அதைக்கூட மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிராகரித்து விட்டார்.

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வுக்கு முந்தைய தீர்வான இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையையும் மஹிந்த நிராகரித்துவிடடார். அமைதி முயற்சிகளுக்குப் பாதகமாகவே மஹிந்தவின் தேர்தல் அறிக்கையின் அனைத்து அம்சங்களும் உள்ளன என்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி இதுகுறித்து கருத்துக் கூறுகையில்,

இனப்பிரச்சினையில் முஸ்லிம் மக்களின் கருத்துகள் மஹிந்தவின் தேர்தல் அறிக்கையில் வெளிப்படுத்தப்படவில்லை.

இது மஹிந்தவின் தேர்தல் அறிக்கை மட்டும் அல்ல. அவரது அரசியல் சிந்தனைகளின் சாராம்சமும் கூட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழு இந்த அறிக்கையை உருவாக்குவதில் ஈடுபட்டிருக்கவில்லை என்பதை கவனத்தில் கொள்கிறோம்.

இந்தோனேஷியாவில் ஆர்ச்சே மாகாண போராளிகளுக்கும் அந்நாட்டு அரசாங்கத்துக்கும் இடையேயான உடன்பாட்டை முன்மாதியாக வைத்து மஹிந்த இந்த தேர்தல் அறிக்கையை தயாரித்துள்ளார்.

அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட ஒரு விடுதலைப் போராட்ட அமைப்புக்கு அதிகாரங்கள் அதிகமாக வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் நிதி திரட்டவும் வரி அறவிடவும் அந்த ஒப்பந்தம் ஒப்புதல் தெரிவிக்கிறது. ஆனால் இங்கே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அத்தகைய அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றனவா? என்பதை அறிய விரும்புகிறோம்? இது தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ விளக்கம் அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். (ற)

# பௌத்தத்தை பாதுகாக்க வேண்டிய பிக்குகள் கட்சி அரசியலிலிருந்து வெளியேற வேண்டும்

## பௌத்த தொழில்சார் அமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

பௌத்த மதத்தைப் பாதுகாக்க வேண்டிய பிக்குகள் கட்சி ரீதியான அரசியல் நடவடிக்கைகளிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டுமென பௌத்த தொழில்சார் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கௌரவமான பௌத்த மதத் தலைவர்கள் வீதிகளில் இறங்கி இனவாதம் பேசுவது பௌத்த தர்மத்திற்கு எதிரான நடவடிக்கை என்றும் மேற்படி அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. நுகேகொட நாலந்தா விகாரையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்கண்ட இக்கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அவ்வமைப்பின் துணைத்தலைவர் மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர அங்கு உரையாற்றுகையில்,

பௌத்த மதத் தலைவர்கள் நடுநிலை சிந்தனையோடு அனைத்து இன மக்களையும் ஒரே குடும்பமாக பார்க்கும் நோக்கில் செயல்பட வேண்டும். இதுவே பௌத்த தர்மம் எமக்குக் கற்றுத்தரும் பாடமாகும். ஆனால், இன்று சில பிக்குகள் கட்சி ரீதியிலான அரசியல் நடவடிக்கைகளில் இறங்கி பிக்குகளின் கௌரவத்திற்கே இழுக்கை ஏற்படுத்தி வருகின்றார்கள்.

ஜாதிகஹெல உறுமய என்ற கட்சியை உருவாக்கும் போது பௌத்த தர்மம் பாதுகாக்கப்படும் என்றார்கள். ஆனால், இன்று அதை நடைமுறைப்படுத்த முடிந்ததா? இனத்துவேச மனப்பான்மையோடு வீதிகளில் இறங்கி, ஆர்ப்பாட்டம் செய்வதும், கூக்குரலிடுவதுமா பௌத்த தர்மம்? இன ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டியவர்களே அதற்கு வேட்டு வைத்தால், பௌத்த மதம் குறித்த மற்றையவர்களின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?

பௌத்த மதத்தையும் இந்த நாட்டையும் பாதுகாத்து வரும் இராணுவத்தினரை அதைரியப்படுத்தும்வகையில் பேசிய ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவிற்கு எதிராக ஏன் ஒரு வார்த்தையேனும் ஜாதிக ஹெல உறுமய வெளியிட முன் வரவில்லை?

அரசியல் செய்ய வீதியில் இறங்கி தமது மரியாதையை இழக்கச் செய்துள்ள பிக்குகள் உடனடியாகக் கட்சி அரசியலில் இருந்து வெளியேற வேண்டும். தமது தவறான நடவடிக்கைகளால் மக்களைப் பிழையாக வழிநடத்த வேண்டாம் என ஜாதிக ஹெல உறுமயவினரை நடுநிலையான பௌத்த மக்கள் என்ற ரீதியில் கேட்டுக் கொள்கின்றோம்.

ஜாதிக ஹெல உறுமயவின் நடவடிக்கை இன்று பௌத்த ஆன்மீகத் தலைவர்களுக்கு எதிரான விமர்சனங்களை மக்கள் அரங்கில் எழுப்பியுள்ளது. பிக்குகள் அரசியல் ஆலோசகர்களாக இருக்க வேண்டுமே தவிர அரசியல்வாதிகளாக இருக்கக்கூடாது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன் வைத்துள்ள பௌத்த மதத்திற்கான வேலைத்திட்டங்களில் எவ்வித தவறையும் பிழையையும் காணமுடியாது. அவரின் பௌத்த மதத்திற்கான ஈடுபாடே அவரின் மத வேலைத் திட்டங்களுக்கான அறிவிப்பு என்று குறிப்பிட்டார்.

பிக்குகள் அரசியல் செய்ய வந்ததன் விளைவுதான் இன்று நாட்டில் தோன்றியுள்ள விபரீத பிரச்சினைகளுக்கு அடிப்படையாகும் எனவும் அங்கு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இந்த ஊடகவியலாளர் மாநாடடில் பௌத்த தொழில்சார் அமைப்பின் தலைவர் பேராசிரியர் ஹெட்டியாராச்சி, பொதுச் செயலாளர் சந்தன சில்வா உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (ற)

# அக்கரைப்பற்றில் ஒருவர் சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் கடந்த புதன்கிழமை இரவு காசிம் எனப்படும் மீரா லெப்பை மொகமது ஹனீபா (வயது 42) என்பவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அட்டாளைச்சேனை வாசியான காசிம் எனப்படும் மீரா லெப்பை மொகமது ஹனீபா சில மாதங்களுக்கு முன்பு மத்திய கிழக்கிலிருந்து நாடு திரும்பியிருந்தார். தனது நண்பர் ஒருவரை அக்கரைப்பற்றிலுள்ள வைத்தியர் ஒருவரின் வீட்டுக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்ற போது வைத்தியரின் வீட்டு வளவிற்குள் இச்சம்பவம் நடந்துள்ளது.

இந்தக் கொலையானது அரசியல் பின்னணி கொண்டிருக்கலாம் அல்லது முஸ்லிம் ஆயுதக் குழு சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (ற)

# போலி முத்திரைகளுடன் இருவர் கைது

(கொழும்பு)

போலி முத்திரைகளை அச்சிட்டு விற்பனை செய்வது தொடர்பான விசாரணைகளை இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இருவர் கைதுசெய்யப்பட்டபோது அவர்களிடமிருந்து 50, 100,200,1000 ரூபா பெறுமதியான போலி முத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தபால் முத்திரைகளை ஒத்ததாகவே இந்த முத்திரைகள் போலியாக அச்சிடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாக அமைச்சு மட்டத்திலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ற-8)

# விபத்துக்குள்ளான விமானம் குறித்து இஸ்ரேலுடன் அரசாங்கம் ஆலோசனை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இராணுவத்தின் ஆளில்லா விமானம் விபத்துக்குள்ளானதற்கான காரணத்தைக் கண்டறிய அந்த விமானத் தயாரிப்பு நிறுவனத்தின் நிபுணர்களின் உதவி நாடப்படவுள்ளதாக விமானப்படைப் பேச்சாளர் அஜந்த டி சில்வா தெரிவித்தார்.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை பிற்பகல் விபத்திற்குள்ளான விமானம் குறித்து விமானப்படையின் உயர்நிலை அதிகாரிகள் குழு விசாரணைகளை தொடங்கியுள்ளன.

இந்த விமானத்தின் தயாரிப்பாளர்களான இஸ்ரேலிய நாட்டு நிறுவனத்தின் நிபுணர்களின் உதவி நாடப்படவுள்ளதாகவும் இதுகுறித்து ஏற்கனவே அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அஜந்த டி சில்வா கூறினார். (ச-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனை

கல்விகற்கும் ஒரு குழந்தை அதன் ஆசிரியர் சற்று கவனக்குறைவாக இருந்தாலும் போதும் பாடங்களிலிருந்தாலும் போதும் பாடங்களிலிருந்து எழுந்து ஓடிவிடுகிறது. அதன் ஆசிரியரோ அதன் பின்னால் ஓடி அதைப் பிடித்து வந்து மீண்டும் கல்வி கற்கச்செய்ய வேண்டியிருக்கிறது.

சுவாமி விவேகானந்தர்

# ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு யாழ்ப்பாணத்தில் துண்டுப்பிரசுரம் வெளியீடு

(வல்வெட்டித்துறை)

எதிர்வரும் 17 ஆம்திகதி நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பில் வடக்கு-கிழக்கு மக்கள் கலந்து கொள்ளாமல் தேர்தலை பகிஷ்கரிக்கவேண்டுமெனக் கோரி 'யாழ்.குடா இளைஞர்கள்' என்ற பெயரில் துண்டுப்பிர சுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

தமிழனுக்கென தனித்துவமான மொழி,நிலம்,நீர் மற்றும் கலை கலாசாரங்கள் இருந்தும் தொடர்ந்து அகதியாகவும் அநாதைகளாகவும் வாழ்கின்றோம்.

இந்நிலையில் வருகின்ற தேர்தலை மக்களாகிய நாம் பகிஷ்கரிக்க வேண்டியவர்களாகின்றோம்.

இது தனி பௌத்த நாடு எனக் கூறும் ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமயவுடன் மகிந்த ராஜபக்ஷவும் தமிழ் மக்களுக்கு தீர்வைக் கொடுக்கப்போவதாக சொல்லிக்கொண்டே அவசர காலச்சட்டத்தை அமுலாக்க கையுயர்தும் ரணில் விக்கிரமசிங்கவும் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் காலம் கடத்தி சுதந்திர உணர்வை மழுங்கடித்து விடலாமென நினைக்கின்றனர்.

இந்நிலையை மாற்றி அமைக்கப் படுவதற்காக தேர்த லில் வடக்கு - கிழக்குப் பகுதியில் வைக்கப்படும் வாக்குப் பெட்டிகள் வெற்றுப் பெட்டிகளாக செல்ல வேண்டுமென அந்ததுண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (து-32)

# துணைப்படையின் 6 வது அணி பயிற்சி முடித்து வெளியேறியது

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கிராமத்தில் லெப். கேணல் மறவன் பயிற்சிப் பாசறையிலிருந்து 6 வ்து துணைப்படை பயிற்சி அணி நேற்று முன்தினம் வெளியேறியது.

இவ்வணியில் 200 மேற்பட்டோர் பயிற்சி முடித்து வெளி யேறினர். வத்திராயன் கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாச செயலாளர் சிவதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ கடற்படையின் யாழ். மாவட்டத் தளபதி கலாந்தன் ஏற்றினார்.

தேசியக் கொடியினை பயிற்சி ஆசிரியர் சின்னமணி ஏற்றினார். சிறப்புரையினை தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி சூசை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் வடமராட்சி செயலணிக் குழுப்பொறுப்பாளர் பாலையா ,வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாச மேலாளர் காதர், வடமராட்சி கிழக்கு கல்விக் கழகப்பொறுப்பாளர் அண்ணாத்துரை ,கனரக பயிற்சி ஆசிரியர் யசோ மாஸ்டர், கடற்படையின் யாழ்.மாவட்ட துணைத் தளபதி ஆண்டான் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-23,43)

# யாழ்.மக்களின் நலன்கருதி பளையில் தமிழீழ காவல்துறை அலுவலகம் திறப்பு

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டில் உள்ள மக்களின் நலன்கருதி தமிழீழ காவல் துறையின் அலுவலகம் ஒன்று பளையில் திறந்துவைக்கப்படவுள்ளது .

பளையில் இயங்கும் தமிழீழ காவல்துறை பணிமனையில் பிரத்தியேகமாக இவ்வலுவலகம் செயற்படவுள்ளது.

இவ் அலுவலகத்தில் மக்களின் முறைப்பாடுகள் ஏற்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென தமிழீழ காவல்துறையின் யாழ். மாவட்ட விசாரணைக்கான பதில் பொறுப்பதிகாரி நாக பரமநாதன் தெரிவித்தார்.

காவல்துறைஅலுவகத்தில் தொடர்பு கொண்டு யாழ்.மக்கள் தமது அனைத்துப் பிணக்குகளையும் இலகுவாக தீர்த்துக்கொள்ள முடியுமெனஅவர்மேலும்தெரிவித்தார்.

இவ் அலுவகத்திற்கான நிரந்தர கட்டம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-43)

# முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கும்

## பிரதம செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவளிக்கப் போவதாக முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நாட்டின் தேசிய பிரச்சினை தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாடு தெளிவாக இருப்பதினால் ஆதரவளிக்க தாம் தீர்மானித்துள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க பிரச்சினை தொடர்பில் சிறுபான்மை மக்களின் உரிமைகளை ஏற்றுக்கொண்டுள்ளமையினாலேயே இந்த ஆதரவு வழங்கும் தீர்மானத்தை எடுத்துள்ளதாக முன்னணியின் பிரதம செயலாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் மீண்டுமோர் யுத்தம் இடம்பெறக்கூடாதென்பதிலும் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாணப்படவேண்டுமென்பதிலும் தெளிவான நிலைப்பாட்டுடன் ரணில் விக்கிரமசிங்க இருப்பது மற்றுமொரு காரணம் என்றார்.

சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்று காணப்படவேண்டுமென்பதில் ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருப்பதன் காரணமாகவும் நாட்டின் சிறுபான்மை மக்களின் நலனையும் கருத்திற்கொண்டே எவ்வித நிபந்தனையுமின்றி ஆதரவு வழங்க தீர்மானித்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-8)

# சிறுவர் கலைக்கதம்பம்

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் இன் ஆதரவுடன் யாழ்.சமூக செயற்பாட்டு மையம் நடத்தும் சிறுவர் கலைக்கதம்பம் இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் தென்மராட்சி யாழ்ப்பாணம் ,கோப்பாய்,சண்டிலிப்பாய்,உடுவில் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து 500இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் தெரிவித்துள்ளார். (ச)

# முத்தலிப் படுகொலை ஆவணங்கள் வெலிக்கடையில் உள்ள சிறைக்கைதியிடம்

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரியான லெப்.கேணல் நிசாம் முத்தலிப் படுகொலை வழக்கு தொடர்பான ஆவணங்கள் வெலிக்கடை சிறைவாசி ஒருவரிடம் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக அந்த விளக்க மறியல் கைதியின் பெயர் வெளியிடப்படவில்லை என்றும் அவருக்கும் நிசாம் முத்தலிப் கொலையில் தொடர்பிருக்கக்கூடுமென்று சந்தேகிப்பதாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தனது உடுப்பில் அந்த ஆவணங்களை அவர் மறைத்து வைத்திருந்தாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஆவணங்களில் மற்றொரு சந்தேகநபர் குறித்த விபரங்கள் இருப்பதாகவும் அப்பியாசக் கொப்பியின் ஒரு பக்கத்தில் எழுதப்பட்டிருக்கும் இது தொடர்பிலான கடிதம், மற்றொரு மூன்றாம் நபரிடம் ஒப்படைப்பதற்காக அந்த விசாரணைக் கைதியிடம் இருந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. (ச-8)

# வீடமைப்புத்துறை அமைச்சராக டிலான் பெரேரா நியமனம்

(கொழும்பு)

தோட்ட வீடமைப்பு மற்றும் உள் கட்டமைப்புத்துறை காபினட் அமைச்சராக டினான் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊடகம் மற்றும் விமானம் - துறைமுகத்துறை பிரதி அமைச்சராகவும் டிலான் பெரேரா நீடிப்பார் என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார். (ச)

# இரு குளிர்பான நிலையங்களுக்கு நீதிமன்றம் குற்றப்பணம் அறவீடு

(யாழப்பாணம்)

சுகாதார சீர்கேடான முறையில் இயங்கி வந்த இரண்டு குளிர்பான உற்பத்தி நிலையங்களுக்கு யாழ். மாவட்ட நீதிமன்றம் குற்றப்பணம் அறவிட்டுள்ளது.

யாழ்.நகரப்பகுதியில் உள்ள இரு குளிர்பான உற்பத்தி நிறுவனங்களும் சுகாதார சீர்கேடான நிலையில் ஐஸ்கிறீம் தயாரிப்பதாக தெரிவித்து யாழ்.சுகாதார மருத்துவப் பரிசோதகர்குழு அந்நிறுவன உரிமையாளர்கள் இருவரையும் யாழ்.மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் திரு நாவுக்கரசு முன்னிலையில் ஆஜர் படுத்தினர்.

அவர்களை விசாரணை செய்த நீதிவான் இருவரையும் தலா 7500 ரூபா குற்றப்பணமாக செலுத்தும்படி நீதிபதி உத்தரவிட்டார். (ச-19)

# கூட்டமைப்பின்...

பரராஜசிங்கம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நாடாவை வெட்டி அலுவலகத்தை திறந்துவைத்தார். தொடர்ந்து சிறப்புரைகளும் இடம்பெற்றன. (ச)


அன்பு வாசகர்களே...

உங்கள்.வலம்புரியின் ஆறாவது ஆண்டின் நிறைவில் பல பக்கங்களைக்கொண்ட

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வெளிவரவுள்ளது.

கல்வி, மருத்துவம், உளவியல், சோதிடம், ஆன்மீகம், விஞ்ஞான ஆராய்ச்சிகள், வரலாறு, பொருளியல், சமூகவியல், அரசியல், கவின்கலை தொடர்பான பல்துறைசார் ஆக்கங்கள் இச்சிறப்பிதழில் இடம்பெறவுள்ளன.

துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் ஆக்கங்களை

பிரதம ஆசிரியர்

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வலம்புரி

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

நிறைவு விழாச் சபை, வலம்புரி


# கைக்குண்டுடன் மூவர் கைது

பேலிய கொடப் பகுதியில் கைக்குண்டு வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேலியகொட கலனிட்டிசபுர பகுதியில் ஒரு வீட்டில் கைக்குண்டு இருப்பதாக கிடைத்த தக்வலை அடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 11.30மணிக்கு அந்த வீட்டினை பொலிஸாரும் படையினரும் சோதனை நடத்தினர் அச் சோதனையில் கைக்குண்டு கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அப்போது வீட்டில் இருந்த துவான் ரஜிம் காசிம் , கதிரேசன் நித்திய கலாம் மற்றும் தர்மதாஸ் ராஜசிவ குமார ஆகியோர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை வெள்ளவத்தையில் அடையாள அட்டைகள் இல்லாத நாலுபேர் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். (ச-8)

# தபால்...

வாக்களிப்பதற்கு விண்ணப் பிப்பதற்காக கடந்த செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதியில் இருந்து இம்மாதம் 10 ஆம் திகதி வரை தேர் தல் திணைக்களம் கால அவ காசம் வழங்கியிருந்தது. (ச-4)

# வேட்பாளர்களின் பிரதிநிதிகளுடன்...

பிரதேசங்களில்பிரசார நடவடிக்கைகளுக்கு இதுவரை இருந்த வரையறைகளை தவிர்ப்ப தற்கு நேற்று தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

அத்துடன் ஆரம்ப கட்ட பிரசார நடவடிக்கைகள் தேர்தல் கண்காணிப்பு ஊடாக நடவடிக்கைகள் வடக்கு கிழக்கில் தேர்தல் வாக்களிப்பு விடயங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.


தபால் மூல வாக்களிப்புத் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இதேவேளை வேட்பாளர்களின் பிரதிநிதிகள் வடக்கு கிழக்குப் பகுதியில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கையில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டுமென தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் இவ்வாறான சந்திப்பொன்று நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (ச-8)










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாம்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.